Nallur Branch Library

# பாதுகாவலன்

PATHUKAVALAN

எவ்வுயிர்க்கும் தாயான
இறைவனே
இவ்வுலகில்
செவ்வியலி ஒரு தாயின்
செழுங்கையில்
வளர்ந்ததென்னே!

(திரு: வி. க.)

மலர்: 114 1988 கிறிஸ்து பிறப்பு — 1989 புத்தாண்டு சிறப்புமலர்
இதழ்: 36–37
25–12–1988
இலங்கையின் ஒரே
தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு
சிறப்பிதழ்: விலை ரூபா 3/=

## நத்தார் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்!

## திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பரின் உலக சமாதான தினச் செய்தி

### ''சமாதானத்தைக் கட்டியெழுப்ப சிறுபான்மையோரை மதிக்கவேண்டும்''

### உலக சமாதான தினம் 1-1-1989

உலக சமுதாயம் முழுவதும் அதிக மதிகமாக சர்வதேசமயமாகிக் கொண்டுவரும் இக்காலகட்டத்தில், உலகிலுள்ள சகல நாடுகளும், ஏறக்குறைய விதிவிலக்கின்றி தமது தனித்துவத்தைக் காத்துக்கொள்ள விரும்பும் சிறுபான்மை மக்களை தமது எல்லைக்குள் கொண்டிருக்கின்றன. வெளித்தோற்றத்திற்கு ஒன்றுக்கொன்று முரணானவை போல் காணப்படும் இவ்விரு போக்குகளும் விடுக்கும் அறைகூவல் சமாதானத்தின் மையத்திற்கே செல்கின்றது.

ஆகையினால் தான் 1989 ம் ஆண்டிற்கென திருத்தந்தை 2 ஆம் அருள் சின்னப்பர் தெரிந்துகொண்ட கருத்தாகிய ''சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கு சிறுபான்மையோரை மதிக்கவேண்டும்'' என்பது, சிறுபான்மையோரின் நியாயபூர்வமான உரிமைகளை மதித்து, ஆதரிப்பதன்மூலம் சமாதானத்துக்கு தமது பங்களிப்பைச் செய்யுமாறு சகல மக்களையும் அழைக்கின்றது. சிறுபான்மை மக்கட்குழு ஒவ்வொன்றினதும் தோற்றுவாயும் வரலாற்றுச் சூழலும் பெருமளவில் வேறுபடினும், துன்பமும் இடம்பெயர்தலும் இவர்கள் அனைவருக்குமே பொதுவானதொரு அனுபவமாகும். மேலும் மனித குலம் ஒன்றே எனவும் ஒவ்வொரு ஆளுக்கும் அவருக்கேயுரிய மகத்துவமொன்று உள்ளதெனவும் இவை எமக்கு நினைவூட்டுகின்றன. மக்களுக்குள்ள உரிமைகள் மதிக்கப்படவேண்டும். இந்தத் திடநம்பிக்கை சர்வதேச சாசனங்களிலும் சபைகளிலும் இடம்பெற்றிருப்பது மட்டுமல்லாமல் சமயக் கோட்பாடுகளிலும் ஆழமாக வேரூன்றியுள்ளது.

(தொடர்ச்சி 2 ஆம்பக்கம்)



## நத்தார் - புத்தாண்டு வேண்டுதல்

மண்ணீர்காற் றனல்வானச் சுடர்கள் போற்ற
மன்னுயிருக் குயிராக மலர்ந்த தேவா
பண்ணமுதை இன்னிசையில் வானோர் பாடப்
பரமதிருக் கனியுதரம் எழுந்த பாலா
விண்ணொளியே தண்ணளியின் கனிந்த ஊற்றே
வெறியலகை மறங்கடிந்த வெற்றி வேந்தே
புண்ணியத்தின் விளைநிலமாய்ப் புவனம் வாழப்
புரந்தருளைப் பொழிந்திடவே இரந்தோம் அன்பே

யாழ் — ஜெயம்

## மீட்பர் பிறந்து விட்டார்

மார்கழிப் பனி
மூசிப் பொழிகின்ற வேளையிலே;
எங்கும்...... ஒரே இருள் மயம்-
பனிப்படலங்கள் ஆங்காங்கே
உறைந்து கிடந்தன.
நகரங்கள், கிராமங்கள் எல்லாம்
அமைதியாகத் தூங்கி விட்டன.
ஆனால்......
பெத்தலகேம் என்ற சிற்றூர் மட்டுமே
அக்களிப்பால், அகமகிழ்வால்
ஆனந்தக் கூத்தாடியது.
காரணம்......
வானவர் போற்றும்
இளம் சூரியன்
மரியின் கரங்களில்
மாமிசமாகி விட்டார்.
உண்மைகள் திரிக்கப்பட்டு,
உரிமைகள் பறிக்கப்பட்டு,
நீதிகள் மறுக்கப்பட்ட
இந்த மண்ணிலே
இறைமைந்தன் பிறந்துவிட்டார்.
விடியாத உள்ளங்களை
விடிய வைக்க
விமலன் தோன்றிவிட்டார்.
உண்ண உணவின்றி
உடுக்க உடையின்றி
இருக்க இல்லிடமின்றித் தவிக்கும்
ஏழை நெஞ்சங்களின்
துன்பத் துயர் துடைக்க
தூயவர் யேசு
பிறந்து விட்டார்.
உலக நாடுகளுக்கிடையில்
ஏன்......?
எம் ஒவ்வொருவர் மத்தியிலும்
நிரந்தர சமாதானமும், ஒற்றுமையும் நிலவ
சமாதானத்தின் தூதுவர் தோன்றிவிட்டார்.
சிறைச்சாலைகளிலே
துன்புறும் உள்ளங்களின்
துயர் போக்கி
விடுதலை அளிக்க
விடுதலை வீரன் பிறந்து விட்டார்.
உலகின் பாவ இருள் போக்கி
உண்மை ஒளி ஏற்றி வைக்க
உலகின் மீட்பர் பிறந்து விட்டார்.

செ. றெபின்சன்
தாழையடி

## திருவழிபாட்டு நாட்காட்டி

திருவழிபாட்டுக் குழுக்களில் இணைந்து திருப்பலிக்கு ஆயத்தம் செய்ய, அன்றாட வாசகக் குறிப்புகளை அறிந்து கொள்ள 1989ஆம் ஆண்டுக்கான மாதாந்த நாட்காட்டி வெளிவந்துவிட்டது. பங்குத்தந்தை மூலம் பெற்றுக்கொள்ளவும். விலை ரூபா 15/-

கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்

# வாழ்த்தவா? எங்ஙனம் வாழ்த்துவேன்?



என்னவோ தெரியவில்லை, நத்தார் விழா நெருங்கி வந்தும், வாழ்த்த என் மனம் விழையவில்லையே! ஆயினும், வாழ்த்த வேண்டும் போலவும் தோன்றுகிறது. இப்படிப்பட்ட நிலையில் எப்படி வாழ்த்துவேன்? இது ஒரு மனப் போராட்டம். "இந்தப் போராட்டத்தின் அடிப்படை என்ன?"—என்று என்னையே நான் வினவினேன். ஆழமாகத் தேடினேன். இது, இன்று நேற்று எழுந்த போராட்டமன்று. கடந்த சில வருடங்களாக நடைபெற்றுவரும் ஒரு மனப் போராட்டம். இந்தப் போராட்டத்தின் கண் எழுந்த ஒரு சிறு சிந்தனையை உங்களுடன் பகிர விழைகின்றேன்.

ஒதுங்கிய நிலையில் ஒரு தனிமை

அண்மைக் காலமாக வடக்கிலும் தெற்கிலும்—பொதுவாக ஈழநாட்டில் (இலங்கை என்ற பொருள்பட) கொலைகள் நடைபெற்று வருகின்றன. சுற்றிவரப் பல கொலைகள் இடம் பெறுகின்றன. தொட்டதிற்கும் கொலைகள்: தகுந்த விசாரணையின்றி மரண தண்டனைகள். இரத்தம் சிந்தாமல் சுதந்திரம் பெற்ற பின்னர், இந்நாடு சிந்திய இரத்தம் கொஞ்சமல்ல, இம்மரணங்களினால் ஏற்பட்ட இழப்புகள் மிகக் கொடுமையானவை: நோவு நிறைந்தவை பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும் என்பது போல, மீண்டும் மீண்டும் இழப்புகளை அனுபவித்து நொந்த குடும்பங்கள் பற்பல. பொருளாதார ரீதியாக, சமூக ரீதியாக, கலாச்சார ரீதியாக எல்லாவற்றிலும் மேலாக உளவியல் ரீதியாக இச் சாவுகள் மிகவும் பாரதூரமாக மக்களைப் பாதிக்கின்றன. இப் பேரிழப்புகளினால் பாதிக்கப்பட்ட பலர் தனிமையில் கண்ணீர் வடிக்கின்றார்கள். துன்புறுக் கண்ணீர் வடிக்க முடியாத ஒரு நிலையில் அவ்வுணர்வுகளை மறுத்து மரத்துப் போய் இறுகிவிட்ட உள்ளங்களும் உண்டு. இதன் விளைவாக ஒரு வகையான தனிமை வளருகின்றது. தலையிடாக்கொள்கையின் அடிப்படையில் ஒரு தொடர்பின்மையை வளர்த்து ஒதுங்கிய நிலையில் ஒரு தனிமை வளருகின்றது; வளர்க்கப்படுகின்றது. இதையே நான் ஆங்கிலத்தில் ஒரு (Isolationist individualism) என்று கூற முனைகின்றேன்.

ஏற்கனவே யாழ்ப்பாணத் தமிழ் சமூகம் ஓரளவு தன்னோக்குடையதாகவே Individualistic) வளர்ந்துள்ளது. அண்மைக்காலமாக நடந்தவையும், தற்பொழுது நடப்பனவும் சேர்ந்து நம்மை மேலும் தற்போக்குடைய ஒரு சமூகமாக மாற்றுகின்றது. இந்நிலை ஆபத்தானது என்பது எனது எண்ணம். சமூகம் என்ற சொல்லிற்கே முரணானது. இங்கு, அன்பு மலருமா? வார்த்தை இங்கு மனுவுருவாகுமா? கடவுள் இங்கு பிறப்பாரா?

கொலைகளைத் தடுக்க எம்மால் முடியவில்லை. நாங்கள் சாதாரண மக்கள்; அதிகாரமற்றோர், வலிமையற்றோர், இப்படிப்பட்ட ஓர் பொறுமை எம்மை இயங்காது ஒதுக்கி விடுகிறது. இந்த மனித இயலாமையை அனுபவிக்கும் பொழுது சக்தி அற்றவர்களாய்

## கரவையூர் செல்வம்

செயலற்றவர்களாய், எம்மையே நாங்கள் நொந்துகொண்டு ஒதுங்கிவிடுகின்றோம். இங்கு தனிமை மேலும் வளருகின்றது. தொற்றுநோயாகத் தனிமை வாழ்வை உருக்கி விடும்; புற்றுநோயாக வாழ்வை உருக்குலைத்து விடும்; தற்நோக்கான வாழ்வு தன்மயமாகி சூம்பிய மொட்டாக வாடிவதங்கி உதிர்ந்துவிடும் அன்பு இங்கு தோன்றுமா? வார்த்தை இங்கு மனுவுருவாகுமா? இறைவன் இங்கு பிறப்பாரா?

இப்படிப்பட்ட ஒரு சூழலில் எப்படி வாழ்த்துவேன்?

சமூக மனமாற்றம்

கிறீத்துவின் வருகையை முன்னறிவித்த தீர்க்கதரிசிகளுள் இறுதியாக வந்த திருமுழுக்கு அருளப்பர், "நாங்கள் என்ன செய்யவேண்டும்." என்று கேட்டு வந்தோருக்கு அவரவருடைய நிலைக்கேற்ப அவர் பதில் சொன்னார், (லூக். 3: 10-14). மக்கள் கூட்டம், கிறிஸ்துவின் வருகைக்கு, "நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்ட பொழுது, "இரண்டு அங்கி வைத்திருப்பவன் இல்லாதவனோடு பகிர்ந்து கொள்ளட்டும்" என்று பதில் சொன்னார், திருமுழுக்கு அருளப்பர். ஆனால், மக்களிடமிருந்து வரி வசூலிக்கும் உரிமையை உரோமை ஆட்சியில் இருந்து சலுகையாகப் பெற்றுக் கொண்ட ஆயக்காரர் வந்து அதே கேள்வியைக் கேட்ட பொழுது, "உங்களுக்குக் குறிக்கப்பட்ட தொகைக்கு மேல் கேட்க வேண்டாம்" என்று அவர்கள் நிலையுணர்ந்து தேவைநோக்கிப் பதில் சொன்னார். ஆயக்காரருக்குப் பாதுகாப்புக் கொடுக்கும் படைவீரர் வந்து அதே வினாவை எழுப்பிய பொழுது, "ஒருவரையும் பயமுறுத்திப் பணம் பறிக்க வேண்டாம். பொய்க் குற்றம் சாட்ட வேண்டாம். கிடைக்கும் சம்பளமே போதுமென்றிருங்கள்" என்று அவர்கள் நிலை தெரிந்து விடை அளித்தார். திருமுழுக்கு அருளப்பர். சித்திரைவதை செய்தோ, அன்றேல் வலோத்காரமாகவோ, அன்றேல் களவாகவோ வரி வசூலிக்காதீர்கள்" என்றும் சில விவிலிய வல்லுனர்கள் மேற்கூறிய வாசகத்திற்கு விளக்கம் தந்துள்ளார்கள். இவற்றில் எல்லாம் இருந்து ஓர் உண்மை புலனாகின்றது. மனந்திரும்பி திருமுழுக்குப் பெற்றவர்கள் எல்லாரிடமும் திருமுழுக்கு அருளப்பர் ஆழமான ஆன்மீகத்தை அன்றேல் இறைமை இணைவை (Mystical Union) அவர் எதிர்பார்க்கவும் இல்லை. அதற்கு அவர்களை அவர் அழைக்கவுமில்லை. ஒரு சமூக ரீதியான மனமாற்றத்தை, ஒரு மனிதாபிமான இதய மாற்றத்தையே அவர் விரும்பினார், அதற்கே அவர்களை அழைத்தார், அவர்.

பகிர்வதில் உண்டு குணப்படுத்தல்:

ஒரு குடும்பத்தில் ஏற்பட்ட இழப்பை நாங்களும் உய்த்துணர வேண்டும். அவர்களோடு சேர்ந்து அவர்களுக்காக நாங்கள் கண்ணீர்விட முடியுமானால் அங்கு சமூகம் உருவாகின்றது. எமது அயலவரின் துன்பத்தில் நாங்கள் பங்கு கொண்டு அவர்களின் சோகக் கதைக்கு செவி மடுக்கும் பொழுது, நாங்கள் அவர்களின் துன்பத்தைக் குறைக்கின்றோம். துயரத்தைத் துடைக்கின்றோம். இங்கு சமூகம் ஒன்று உருவாகின்றது இங்ஙனம் நாலு பேர் கூடி தங்கள் தங்கள் துன்ப துயரங்களையும், இழப்புகளால் ஏற்பட்ட நோவுகளையும் கோபங்களையும் பகிரும் பொழுது ஒருவகைக் குணப்படுத்தல் இயல்பாகவே ஏற்படுகின்றது. இங்கு தான் அன்பு மலரும். வார்த்தை மனுவுருவாகும். கடவுள் இவ்வுள்ளங்களில் பிறப்பார்—மீண்டும் பிறப்பார்.

ஆடம்பரமான கொண்டாட்டங்கள், விழாவெடுத்தல் தேவையற்றவைதான். சமூகத்திற்கும், நாட்டிற்கும் அவை

(15ஆம் பக்கம் பார்க்க)

தேனருவி:

## கிறிஸ்து பிறப்பு விழா (25-12-88)

திருத்தந்தை வாழும் வத்திக்கான் நகரில் இருக்கும் அழகிய பொருட்காட்சிச் சாலையில் மைக்கல் ஆஞ்சலோவின் ஒப்புயர்வற்ற படைப்பு என்னும் ஓவியம் உண்டு. அந்த ஓவியத்தின் ஒரு பகுதியில் இறைவன் விண்ணவர் புடைசூழ வீற்றிருக்கிறார். அவருக்கு எதிரே ஒரு மனிதன் அமர்ந்துள்ளான். இறைவன் தன் வலக்கரம நீட்டி சுட்டுவிரலால் எதிரே மனிதன் நீட்டும் கரத்தின் சுட்டுவிரலைத்தொடுகிறார்.

இறை-மனித உறவு படைப்பின் தொடக்கத்திலேயே பிறந்தது என்பது அதன் அர்த்தமாகும். மனிதனின் வாழ்வுக்கு ஊற்றாக விளங்கும். இறைவன் அவனோடு அன்புறவில் இணைய விரும்புகிறார். அதற்காக முதல் அடியெடுத்து வைத்தவரும் அவரே. இறைவன் மேலே மனிதன் கீழே என்ற தவறான எண்ணத்தை மாற்ற 'மனிதருள் மனிதனாக' வாழ விரும்பினார் அந்த மனுவுருவான தெய்வம்.

'இம்மானுவேல்' என்றால் 'கடவுள் நம்மோடு' என்பதே பொருள். இந்த அனுபவம் வெறும் கனவுமல்ல, கற்பனையுமல்ல. அவரது பிறப்பினால் உருவான தனிப்பெரும் வரலாறு ஆகும். இந்த வரலாற்று உண்மையை ஆண்டுதோறும் கிறீஸ்தவரும் ஏன், கூடவே முழு சமுதாயமும் காலம், கலாச்சாரம் என்ற பேதமின்றி நினைவு கூர்ந்து கொண்டாடுகின்றார்கள். இதுதான் கிறீஸ்மஸ் பெருவிழா. இறை—மனித—உறவில் பிறக்கும் அமைதி, மகிழ்ச்சி, நிறைவுதான் இவ் விழாவின் நற்செய்தியாகும்.

## இறைவனின் அன்னை-மரியாள் விழா (01-01-89)

ஆண்டின் முதல்நாளில், அன்னை மரியாளை இறைவனின் தாயாகப் போற்றும் விழாவையும், திருச்சபைத் தாய் இணைப்பது மரியன்னையின் தாய்மையின் ஆசீரையும் மக்கள் மனங்களில் பொழிந்திட வேண்டும் என்பதற்காகவே, இவ்வாண்டில் நிகழப்போகும் சம்பவங்கள் எப்படியோ என்ற அங்கலாய்ப்பு நிலையில் மரியன்னையின் மனநிலைப் புத்தாண்டுச் செய்தியாக அமைகிறது.

1988ம் ஆண்டைப் பின் நோக்கிப் பார்க்கையில் பலர் மனதில மகிழ்விலும் பார்க்கக் கசந்த அனுபவம் அதிகம் போலத் தென்படலாம். வாழ்விலும், பார்க்கத் தாழ்வையும், வெற்றியிலும் பார்க்கத் தோல்வியையும், நிறைவிலும் பார்க்க மனமுடைவையுமே கண்டதாகப் பலர் கூறலாம். இவற்றை எண்ணி எண்ணி மனம் புண்படலாம். குறிப்பாக எம் நாடு கண்ட உயிர், பொருள், இழப்புக்கள் கணக்கிட முடியாதவை அவை ஈடுசெய்ய முடியாதவை.

காலங்கள் மாறுவதுபோல மனித அனுபவங்களும், மாறுகின்றன. இரவுக்கு எல்லை விடியத்தானே. இலை உதிர்வதற்கு ஒரு காலம் தளிர்ப்பதற்கு இன்னொரு காலம். புதிதாக மலர்ந்து கொண்டிருக்கும், எண்பத்தொன்பதாம் ஆண்டு பலர் வாழ்வை மலரவைக்கும் மங்கலமான காலம் என்பது எமது நம்பிக்கை.

## திருத்தந்தை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இது சமூக அமைப்புகளிலும், சட்ட அமைப்புகளிலும் தெளிவாக வெளிப்படுத்தப்படல் வேண்டும், இதைவிட மேலாக அது நாளாந்த வாழ்வில, தனிநபர்களினதும் சமுதாயக்குழுக்களினதும் அன்றாட வாழ்வில் இடம் பெறவேண்டும். ஆகவே, சகல மக்களும் சமாதானத்துக்குப் பங்களிக்கக்கூடிய நியாயபூர்வமான வேறுபாடுகளுள்ள ஒரு சமுதாயத்தைக் கட்டியெழுப்புமாறு சகல நாடுகளையும் சர்வதேச ஸ்தாபனங்களையும், சகல மக்களையுமே திருத்தந்தை 2 ஆம் அருள் சின்னப்பர் அழைக்கின்றார். அவர் அண்மையில் வெளியிட்ட Sollicitudo Rei Socialis என்னும் சுற்றுமடலில் குறிப்பிட்டுள்ளவாறு "சமாதானம் அனைவருக்கும் இருக்கும், அல்லது ஒருவருக்குமே இராது"

சில மக்கட் குழுவினரின் அடிப்படை உரிமைகள் (சமய சுதந்திரம் உட்பட) அலட்சியம் செய்யப்படும்போது அல்லது மறுக்கப்படும்போது உண்மையான சமாதானம் நிலவமுடியாது. அதேபோன்று உரையாடல் மறுக்கப்பட்டு, வன்முறைகள் கையாளப்படும் போதும் அது அழிக்கப்படலாம். இன்னும் நுட்பமாகச் சொன்னால் ஒரு தனிநபரோ, குழுவினரோ பிறருக்குத் தம் உள்ளத்தை மூடிவிடும்போது சமாதானத்திற்குக் குழிபறிக்கப்படுகிறது. ஆகவே 1989 உலக சமாதான தினத்திற்காக கருத்தானது. சமாதானத்தைக் கட்டியெழுப்புவது அனைவரினதும் கடமை, ஒவ்வொரு தனிநபரினதும் துல்லியமான பொறுப்பு என்பதை அனைவர்க்கும் நினைவூட்டுகின்றது. சிறுபான்மைக் குழுக்கள சமாதானத்துக்கு செயயவேண்டிய பங்களிப்பு இன்றியமையாதது. அரசாங்கங்களும் பக்களும், சிறுபான்மையினருங்கூட இந்தக் கொடையைப் பேணி வளர்க்க இயன்றதெல்லாம் செய்தல் வேண்டும்.

# 'பஸ்ரான்ட்' பிச்சைக்காரி

அந்த பஸ்தரிப்பு மண்டபம் நான் குடியிருக்கும் வீட்டுக்கு அண்மையில் தான் இருக்கிறது அன்றும் அலுவலகத்தில் இருந்து வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றேன். அந்த பஸ்தரிப்பு மண்டபத்தில் அவள் இருக்கின்ருள். மடியிலே அவள் குழந்தை. பத்து மாதத்துக்கு முன்னர் நானிங்கு வேலை மாற்றலாகி வந்தபோது அந்தக் குழந்தை பிறந்து இரண்டு மாதமாவது ஆகியிருக்க வேண்டும். இப்பொழுது அது ஒருவயதுப் பிள்ளையாக வளர்ந்து விட்டிருந்தது.

பரட்டைத்தலை, மெலிந்த உடல், குச்சிகள் போன்ற கைகால்கள் எந்த நேரமும் மூக்கு வழிந்தபடி. நிறம் மட்டும் தாயைப் போன்று நல்ல சிவப்பு. அந்தக் குழந்தையின் கண்களிலே மட்டும் ஒரு வித கவர்ச்சி, சரியான பராமரிப்பு இருந்திருந்தால் அதன் அழகே அடுத்தவரைக் கொள்ளை கொண்டு விடும் என்பது என்னுடைய கணிப்பு.

அவளுடைய பூர்வீகம் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. நான் அறிந்து கொள்ளவும் முயற்சித்தது கிடையாது. அதற்கு ஒரு முக்கிய காரணம் அவளுடைய ஒழுக்கத்தைப் பற்றி மற்றவர்களுக்கு நல்ல அபிப்பிராயம் கிடையாது. அந்தக் குழந்தைக்குத் தகப்பன் யார் என்று அவளுக்கே தெரியாதாம், அந்தளவுக்கு மோசமானவளாம். அவளைப் பற்றி நாமேன் அறிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும்? அவளைப் பற்றி வலிந்து அறியப்போய் வீணாக ஏன் வம்பில் மாட்டிக் கொள்ள வேண்டும்? எப்பொழுதாவது அவளைப் பற்றியோ அவள் குழந்தையைப் பற்றியோ பேசவேண்டி ஏற்பட்டால் பஸ்ராண்ட் பிச்சைக்காரி, என்று பேசிக்கொள்வோம்.

வீட்டில் என் மனைவியோ குழந்தைகளோ இல்லை இந்த முறை கிறிஸ்துமசுக்கு பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு தாய் வீட்டுக்கு போய் விட்டாள். கிறிஸ்துமசுடன் லீவில் போனல் புது வருடப் பிறப்புவரை அங்கு நிற்க வேண்டிவரும். அப்படி தொடர்ந்து லீவில் நான் நிற்க முடியாது. அல்லாமலும் நாடு இருக்கிற நிலையில் தொடர்ச்சியாக வீட்டில் யாரும் இல்லாது இருப்பது நல்லதல்ல என்ற பாதுகாப்பு எண்ணத்தையும் கருத்தில் கொண்டு 'வருடத்துக்கு வருகிறேன்' என்று மனைவிக்கு சமாதானம் கூறி அனுப்பிவிட்டு நான் மட்டும் நிற்கின்றேன்.

இரவு கிறிஸ்துமஸ் பூசைக்குப் போக வேண்டும் என்ற ஆசை. பூசையில் நன்மை பெறவேண்டும் என்ற உணர்வு, எனவே வீட்டுக்கு வந்த நான் குளித்து உடை மாற்றிக் கொண்டு அப்படியே வாசிகசாலைப் பக்கம் போய் விட்டு இன்று நேரத்தோடேயே கடையில் ஏதாவது சாப்பிட்டு வருவோம் என்று புறப்படுகின்றேன். பஸ்தரிப்பைத்தாண்டும் போது என் கண்கள் என்னை அறியாமல் அந்தப்பக்கம் திரும்புகின்றன. அவள் என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள். குழந்தை அவள் மடியிலே உறங்கிக் கொண்டிருந்தது அவள் கண்களை என் கண்கள் சந்தித்தபோது

சிறுகதை

எனக்கு என்னவோ போலிருந்தது அவள் என்னிடம் எதுவோ யாசிப்பது போலிருந்தது. அவள் ஒழுக்கத்தைப் பற்றிய நினைவு என் மனதில் மின்னலிடவே 'டக்' கென்று பார்வையைத் திருப்பிக் கொண்டு நடக்கின்றேன்.

மீண்டும் வீடு திரும்புகின்ற போது இருட்டி விட்டது. பஸ்தரிப்பை நெருங்கும் போது மனதை என்னவோ செய்கின்றது. அவள் பார்வையை நமக்கு நேர் எதிர்கொண்டதன் தாக்கமோ என்னவோ எழக்கூடாத எண்ணமெல்லாம் எனக்குள் எழுந்தது. எனக்குள்ளும் இப்படி உணர்வுகளா? சீ...நான் எவ்வளவு மட்டமானவன், என்னைப் போன்ற யாரோ சபல புத்திக்காரனுலே தானே அவள் இன்றைக்குக் குழந்தையும் கையுமாக நடுத்தெருவிலே நிற்கின்ருள்' என்று என்னை நானே கடிந்து கொண்டு அந்தப் பக்கமே பாராது விடுவிடென நடக்கின்றேன். நன்கு இருட்டி விட்ட நேரம். அந்த நேரம் அவ்விடத்தில் நானும் அவளும் மட்டும் தான். பஸ்தரிப்பைத் தாண்டும்போது ''ஐயா...'' என்று அவள் குரல் என்னை அழைப்பது கேட்கிறது.

என் உடலில் ஒரு பதட்டம். மற்றவர்கள் பேசிக்கொள்வது போல இவள் உண்மையிலேயே ஒரு மோகினிப் பேய்தான் என்ற முடிவுக்கு வந்து விடுகிறேன். அவள் என்னை அழைத்ததை யாரும் பார்த்து விட்டார்களா என்று அங்கும் இங்கும் பார்த்தபடி எட்டி நடை போடுகின்றேன். நல்ல காலம் யாரும் பார்க்கவில்லை. வீடுவந்து சேர்ந்து விட்டேன். 'அப்பாடா! தப்பித்தேன்' என்ற ஒரு மன நிறைவு...... ஆனல் அவள் நினைவு மறுபடியும், மறுபடியும் வந்து கொண்டேயிருந்தது.

இரவு நேரம் பத்து மணியை நெருங்கிக் கொண்டிருந்தது. எனக்குத் தூக்கம் வரவில்லை. சாமப் பூசைக்குப் போக வேண்டும் என்ற எண்ணத்தில் ஏதோ ஒரு புத்தகத்தை எடுத்து வாசித்துக் கொண்டிருக்கின்றேன். என் வீட்டுக் கதவு தட்டப்படுகின்றது...... யாராக இருக்கும்? என் கேள்விக்கு பதில் கிடைப்பது போன்று அவள் குரல் ஒலிக்கின்றது

''ஐயா......''

எனக்குத் 'திக்' கென்று இருக்கின்றது. இது என்னடா இந்த நேரத்தில் வந்து இந்த விபச்சாரி என் வீட்டுக் கதவைத் தட்டுகிருளே. அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்கள் கண்டால் என்னைப்பற்றி என்ன நினைப்பார்கள்? என் மனைவி கூட வீட்டில் இல்லாத வேளையில் அவள் கூப்பிட்டு விட்டுப் பேசாமல் போகட்டுமே என்று இருந்து விடலாம். ஆனல், இந்தச் சத்தத்தில் அயல் வீட்டுக்காரர் எழும்பி விட்டால் என் மானம் போய் விடுமே என்று அஞ்சியவனக எழுந்து சென்று முன்கதவைத் திறந்தேன்.

அவள் தான் நின்றிருந்தாள், கையிலே குழந்தை. அந்த இரவில் அவளை எனக்கு மிக அண்மையில் தனிமையில் காண்கின்றேன். என் உடம்பில் ஒரு படபடப்பு ''என்ன வேணும்'' என்று அதட்டலாகக் கேட்கின்றேன். ஆனல் என் குரலில் வெறுப்போ கோபமோ இருப்பது போல எனக்கே தெரியவில்லை. அவள் பேசினள்.

''ஐயா சாமத்தில வந்து குழப்பிறனென்று கோவிக்காதீங்க...எம் பிள்ளைக்குச் காய்ச்சல். குளிரில் உதறுது. மழைக்குணம் வேற...உங்க வீட்டுக்குப் பின்புறம்... அந்தக் கராஜில இன்னிக்கு ரவைக்கு மட்டும் படுத்துக்கவா ஐயா''

அவளைப்பற்றி இதுவரையில் நான் கொண்டிருந்த எண்ணத்தில் ஒரு மாற்றம். அவள் மீது இரக்கமாகவே இருந்தது. ஆனல் மனைவியும் இல்லாத வேளையில் விபச்சாரி என்று பெயர் எடுத்தவளை வீட்டில் தங்க அனுமதிப்பது பல விபரீதங்களை ஏற்படுத்தும் என்பதனல் அதற்கு மனம் ஒப்பமறுத்தது.

''இந்தா இஞ்ச அம்மாவும் இல்ல... வேற எங்காவது போய்ப்பார்.''

''எல்லா வீட்டிலேயும் கேட்டிட்டுத்தான் வந்தேன்.''

''பாத்தியா அவங்களே இடம் தராதபோது நான் மட்டும் தந்தால் நாளைக்கு என்னைப்பற்றி என்ன நினைப்பாங்க...?''

அவள் பேசாது நின்ருள்... எனக்கும் எம் பிள்ளைக்கும் ரொம்பப் பசிங்க''

''அதுக்கு இந்தச் சாமத்தில நான் என்ன செய்யிறது போ...'' நான் கதவை மூட முயன்றேன்......

''ஐயா எம்புள்ளை நடுங்குது போத்திக்கிறதுக்கு ஒரு துணி யாவதுய கொடுங்க சாமி''

என் கோபம் எல்லை மீறுகிறது. ''சீ பேசாமல் போ வெளியே'' என்றபடி கதவை அடித்துச் சாத்துகின்றேன். அவள் போய் விட்டாள். அப்பாடா.... என்னைப் பாதுகாத்துக் கொண்டதாக ஒரு உள்ளுணர்வு, நேரங் கெட்ட நேரத்தில் மனைவியும் இல்லாத பொழுது அந்த விபச்சாரியை வீட்டில தங்க விடுவதோ... அவளுக்கு ஏதாவது சாப்பிடக் கொடுப்பதோ......அவள் கேட்டபடி ஒரு துணி தானும் கொடுக்கிறதோ எவ்வளவு ஆபத்தான விடயம். ஊரவர் தான் போகட்டும் நாளைக்கு என் மனைவி என்னைப்பற்றி என்ன நினைப்பாள். ஆயிரம் தான் அவள் நல்லவளாய் இருக்கட்டும்...... நாளைக்கு ஊரில் நாலுபேர் நாலுவிதமாய்பேச...அது அவள் காதில் விழ பிறகு என் குடும்ப நிம்மதியே போய்விடும்...நான் செய்ததுதான் சரி. எனக்கு நானே சமாதானம் செய்து கொள்கின்றேன்......

இரவு பூசைக்காக நான் அந்த பஸ்தரிப்பைத்தாண்டும் போது அவள் குழந்தை வீரிட்டு அழுது கொண்டிருப்பது என் காதில் விழுகின்றது.

இரவு பூசை முடிந்து முண்டியடித்துக் கொண்டு யேசு பாலனை முத்தி செய்து விட்டு அறிந்தவர்களுக்கு கிறிஸ்துமஸ் வாழ்த்துக் கூறி நான் வீடு திரும்பும் போது மணி இரவு ஒன்றரை. பஸ் தரிப்பை நான் கடக்கும் போது...இப்பொழுது குழந்தை அழுவது கேட்கவில்லை. அவள் விம்முவது என் காதில் விழுகின்றது.

இரவு நெடுநேரம் கண் விழித்ததால் அன்று விடிந்தும் அதிக நேரம் தூங்கிவிட்டேன், இரவு நல்ல மழை பெய்திருக்கிறது. எனக்கு ஒன்றுமே தெரியாது. காலைக் கடன்களை முடித்துக் கொண்டு சாப்பிடுவதற்காக கடையை நோக்கிப் போகின்றேன். பஸ் தரிப்பில் மக்கள் கும்பலாகக் கூடிநிற்பது தொலைவில் நின்று பார்க்கவே தெரிகிறது. அண்மித்த போது அவள் ஒலமிட்டு அழுவது நாரசமாக என் காதுகளில் விழுகின்றது. கிறிஸ்மஸ் இரவின் அனுபவங்கள் ஒன்றன் பின் ஒன்ருக நினைவில் வந்து போகின்றன. அந்தப் பிள்ளையின் இறப்புக்கு நானும் ஒரு காரணமா? எனக்குக் கிறிஸ்துமஸ் சப்பென்று போகின்றது.

''அவளுக்கென்ன இது செத்தால் இன்னுமொன்றைப் பெற்றுக் கொள்ளுவாள்......'' என்று அந்தக் காட்சியைப் பார்த்து விட்டு என்னைக் கடந்து சென்றவர்கள் இருவர் பேசிக் கொள்வது என் காதில் விழுகின்றது.

அவளை இப்படிப் பெற வைப்பதும், இப்படிப் பறிகொடுக்க வைப்பதும் யார்? என்ற வினவை எனக்குள் எழுப்புகின்றேன். இந்தச்சமூகம் ஆகாயத்தை நோக்கித் துப்பிக்கொள்கின்றது. அந்த எச்சில் தமது முகத்தில் விழுவதை அது காண்பதில்லை...

—நாவண்ணன்

## நெஞ்சில் நிறைந்திடும்......


அடியவர் எம் பாவத்திற்காக
அவதரித்தார் அண்ணல் யேசு
அபலைகள் நலம் கவலையை
அகற்ற ஆசையுடனே!
அவதரித்தார்:-

இதயத்தில் நல் இன்பத்தை
இனிதாகவே ஏற்றவே.
இபகர மாதா உதரத்தில்
இரட்சகர்!
அவதரித்தார்:-

தந்தை சொல் தட்டாத
தனயனுகத் தார்புவியில்
தப்பால் தவறுகளை எதிர்த்தாரே
தாய், தந்தை, கடமைகளை
தவருமல் செய்து விட்டார்.

பொழிந்திட்டார். புவியில் பல
பொன் மொழிகளை, செய்திட்டார்
பல புதுமைகளைப் பலர் துன்பம் போக்கவே!

# கிறிஸ்மஸ் தாத்தா தோன்றிய வரலாறு





டிசம்பர் மாதம் பிறந்தாலே கிறிஸ்மஸ் பண்டிகை அனைவருக்கும், நினைவில் வரும். கூடவே கிறிஸ்மஸ் தாத்தாவின் நினைவுகளும் வரும். பனிக்குல்லாய், பருத்தஉடல், சிரித்த முகம், சிவந்த கன்னங்கள், குறும்பு கொப்பளிக்கும் கண்கள், கம்பளி உடை, தோளிலே ஒரு மூட்டை, அது நிறை குழந்தைகளுக்கான பரிசுப்பொருட்கள் இதுதான் கிறிஸ்மஸ் தாத்தாவின் தோற்றம். அவரைச் சுமந்து வரும் சறுக்கு வண்டியை எட்டுக் கலைமான்கள், இழுத்து வரும். இவர் வசிக்குமிடம் உலகின் பனி மூடிய வடதுருவம்தான்- இதெல்லாம் கிறிஸ்மஸ் தாத்தாவைப் பற்றிய நம்பிக்கைகள்.

16ம் நூற்றாண்டுக்கு முன் ''மீரா'' என்ற ஊரில் நிக்கலஸ் என்பவர் பிஷப்பாக இருந்தார். அன்பு உள்ளம் கொண்டவர். ஏழைகளின் துன்பம் துடைப்பதில் துடிப்பாக இருந்தார். துன்பமுற்றவர்களுக்கு தாம் யார் என்று சொல்லாமலே உதவுவார். ஒரு சமயம் ஓர் ஏழைக்குடியானவன் தன்னுடைய மூன்று பெண்களுக்கும், திருமணம் செய்து கொடுக்கப்பணமில்லாமல் ஏங்கி கொண்டிருந்தான். புனித நீக்லாஸ் என்ன செய்தார் தெரியுமா? அந்தக் குடியானவனின் குடிசையின் புகை போக்கி வழியாக பொற்காசுகள் கொண்ட மூன்று மூட்டைகளைப் போட்டார் குடியானவனுடைய மூன்று பெண்களுக்கும், சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. இப்படி இவரைப் பற்றி எத்தனையோ கதைகள் உண்டு. அவருடைய நினைவாகத்தான் கிறிஸ்மஸ் தாத்தாவின் பாத்திரம் உருவாகிற்று. ஆனால் இன்று உலகம் முழுவதிலும், புகழ்பெற்று விளங்கும் ''சந்தாக்கிளாஸ்'' உருவ அமைப்பாக அது ஆதியிலே இல்லை. பல நூற்றாண்டுகள் வரை கிறிஸ்மஸ் தாத்தா என்பவர் கௌரவம் மிக்க, நீளமான ஒரு வயோதிபராகத்தான் உருவப்படுத்தப் பட்டிருந்தார். நீக்லஸின் நினைவாகச் சலங்கைகள் பூட்டிய வண்டியோ, பனிக்குல்லாயோ, கம்பளி உடையோ, கிறிஸ்மஸ் தாத்தாவின் பாத்திரத்துக்குக் கிடையாது. அப்படியானால், இன்றைய சந்தாக்கிளாசை உருவகப்படுத்தியவர் யார்? எப்போது?

இன்றைய சந்தாக்கிளாஸ் தோன்றி 150 ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றது. 1822-ம் ஆண்டில்தான் இன்றைய குதூகலம் மிக்க, குண்டுத்தாத்தா உருவாகினார். இவரை உருவாக்கியவர் ஓர் அமெரிக்கப்பேராசிரியர் டாக்டர் க்ளெமெண்ட் ஸி. மூர். என்பது இவர் பெயர் நியூயோர்க்கிலுள்ள கொலம்பியா சர்வகலாசாலையில ஒரு பேராசிரியர்.

தம் நண்பர்களுக்கு கிறிஸ்மஸ் பரிசுக்களை வழங்குவதற்காக பனி மூடிய தெருக்கள் வழியே குதிரைகள் இழுத்துச் செல்லும் ''ஸ்லெட்ஜ்'' வண்டியில் போய்க்கொண்டிருக்கும் போதுதான் மூரின் கற்பனையிற் சந்தாக்கிளாஸ் (கிறிஸ்மஸ் தாத்தா) உருவாகினார். குளிர் வீசும் அந்த இரவில் இப்படிப் போய்க்கொண்டிருக்கும் பொழுதுதான் அவருடைய ஒன்பது குழந்தைகளும் புனித நீக்லாசைப் பற்றி விவரிக்கும் படி அவரைத் துளைத்தெடுத்தது நினைவுக்கு வந்தது தம் குழந்தைகளின் வேண்டுகோளை நிறைவேற்றுவதற்காக, புனித நீக்லசைப்பற்றிய ஒரு பாடலை மனதுக்குள் உருவாக்கினார் ஆங்கிலத்தில் கவிதை புனைப்பதில் ஆற்றல்படைத்தவர் மூர். தம் குழந்தைகளுக்கு புனித நீக்லசைப் பற்றிக் கூறுவதற்காக உருவாக்கிய ஓர் பாத்திரம்தான் இன்றைய கிறிஸ்மஸ் தாத்தா. (சந்தாக்கிளாஸ்)

மூரின் இந்தக்கற்பனைப்பாத்திரத்தைக் கேட்டு அவரது குழந்தைகள் மகிழ்ச்சிக் கூத்தாடினார்கள். ''புனித நீக்லாசின் விஜயம்'' என்ற இந்தப் பாடலை திரும்பத்திரும்பப் படிக்கச்சொல்லி கேட்டு மகிழ்ந்து போனார்கள். ஆனால் மூர் தம்முடைய இந்தப்பாடலையும், கிறிஸ்மஸ் தாத்தாவையும், உலகுக்கு அறிமுகப்படுத்தவில்லை. அவருடைய நண்பர் ஒருவர் இதை இரகசியமாகப் பிரதியெடுத்து ஒரு புதினப் பத்திரிகைக்கு அனுப்பி வைக்காதிருந்தால் சந்தாக்கிளாஸ் உலகில் தோன்றியிருக்கவே மாட்டார். பத்திரிகையில் அப்பாடல் பிரசுரிக்கப்பட்டது. பாடலைப்படித்தவர்கள் அதன் ஆசிரியர் யார் என்பதை அறிய ஆவல் கொண்டார்கள். ஆனால் மூர் தம்மை அறிமுகப்படுத்த விரும்பவில்லை. அவர் எத்தனையோ சிறந்த இலக்கியங்களையெல்லாம் உருவாக்கியுள்ளார். அதனால் மட்டுமே புகழ்பெற விரும்பிய அவர், இந்த புதிய கிறிஸ்மஸ் தாத்தாவின் படைப்பினால் புகழ்பெறவிரும்பவில்லை. அந்தப்பாடலை எழுதி 22 ஆண்டுகளுக்குப் பின்னரே தாம் அதை எழுதியதாக ஒப்புக்கொண்டார். இந்த இடைவெளிக்குள்ளேயே பாடலின் புகழ் உலகெல்லாம், பரவிவிட்டது.

கிறிஸ்மஸ் தாத்தா என்ற ஒரு கடினமான உருவை, மிக, எளிதாக, சிரிப்பூட்டக் கூடியதாக, கேளிக்கையும் மகிழ்ச்சியும் கொண்ட ஒரு பாத்திரமாக மாறியதற்காக மூர் பிற்காலத்தில் பெருமை அடைந்தார். கம்யூனிஸ்ட் நாடுகள்கூட கிறிஸ்மஸ் தாத்தாவை அங்கீகரித்து விட்டன. புனித நீக்லசின் நல்ல குணங்களுக்காக உருவாக்கப்பட்ட கிறிஸ்மஸ் தாத்தாவை, ஓர் அமெரிக்கப் பேராசிரியர் தம் குழந்தைகளுக்காக குதூகலம் மிக்க ஒரு குண்டுத் தாத்தாவாக்கி உலகக் குழந்தைகளின் மகிழ்ச்சிக்கு உரியவர் ஆகிவிட்டார். இதுதான் சந்தாக்கிளாஸ் பிறந்த கதை.

D. றேய்றேச்.
(புனித சவேரியார். ஆ.ம.ம.வி.)
பள்ளிமுனை. மன்னார்.

## மீட்ட பாலா

மார்கழியில் பிறந்த பாலா
மானிடரை மீட்டபாலா
ஏழ்மையிலே வளர்ந்தாயே
எளியவரை மீட்டாயே
பாரினிலே வந்தெம்மை
பரிவுடனே காத்து நின்றாய்
தாழ்மையிலே ஊன்றி நின்றாய்
தாழ்ந்தோரை உயர்த்தினாயே
அன்பாலே அனைவரையும்
அவனியிலே வாழ வைத்தாய்
பண்பாலே என்றும் – உம்
பகைவரையும் பொறுத்தாயே
பொறுமையின் பொக்கிஷமே
இறைசித்தம் நிறைவேற்ற
எமக்காய்ப் பரிந்துரைப்பாய்

J. வதனி
சென். ஜேம்ஸ் வசாவிளான்

நின்றாய் 25–04–1975



வந்தாய்– 11 12 1 9 4 8

சென்றாய்– 06 01 1 9 8 5

06–01–1985-ம் ஆண்டு இனவெறி பிடித்த அரக்கர் கூட்டத்தினால் அமரத்துவம் அடைந்த புன்னாலை வங்காலைப் பங்குத்தந்தை அருள்திரு மேரி பஸ்ரியன் அடிகளுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்!

## ஓ... வீரனே...

ஓ... வீரனே! உனையொரு முறை நினைத்திட்டேன்
ஊனக் கூட்டைத் திறந்து ஞானவெளி சென்ற
4-ம் ஆண்டின் நினைவில் உனையொரு முறை
ஊன்றி நினைத்திட்டேன்.

காட்டிக் கொடுத்தார்கள் கயவர்கள்
நாட்டி விட்டார்களா சாதனையை?
மாட்டி விட்டார்கள் அவர்களும்
உடலை வாட்டிக் கொண்டார்கள் அவர்களும்

காடையர் கூடினர் தேடினர் மா... வீரனை
கோழையர் தீர்த்தனர் வேட்டுக்களை
பெற்றனர் பரிசாக நோட்டுக்களை
அழித்தனர் அரக்கர்கள் உடலை
அழைத்தார் ஆண்டவர் ஆவியை

அறிவிலியாம் அதிகாரியோடு
அரக்கர்கள் கூடினர்
வஞ்சகர் சூழ்ந்தனர்
தீட்டினர் திட்டமதை
மூட்டினர் உடலதனில் தீயை

ஓ... வீரனே நீ வீரகாவியம் படைத்திட்டாய்
உன்னுடைய குருதியினாலே நீ
வீரகாவியம் எழுதிவிட்டாய்
உறுதியின் உறைவிடமாகிவிட்ட நீ
உன்னதர் திருவடியிற் சேர்ந்திட்டாய்

ஓ... வீரனே உனையொரு முறை
ஊன்றி நினைத்திட்டேனே
பாவிகளிடம் பலியாகி சென்றாய் எமக்காக
பரமனிடம் பரிந்து பேச
ஈனரை மீட்பாய் ஞானரைச் சேர்ப்பாய்
நின் ஆன்மா நித்திய சாந்தி பெற
நித்தமும் நிமலனை வேண்டுகின்றோம்.

சந்தியோகு பிரபா
முதலைகுத்தி, உயிலங்குளம்

## 31ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி



மரியாம்பிள்ளை அன்ரனி நிக்ஸன்

ஜெயதீசராஜன் (தீசன்)

மலர்வு: 14–05–1971 உதிர்வு: 01–12–1988

மாதம் ஒன்று போனாலும் உன் அன்பு மொழி எம்மை விட்டகலவில்லை. தினமும் கேட்ட உன் இனிய ஓசையைத் தேடி அலைகின்றோம்.

''உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம் கொள்பவன்
இறப்பினும் வாழ்வான்''
(அரு–11: 25)

இரக்கமுள்ள தந்தையே, இவருக்கு நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும்.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர், உறவினர்.
கரவெட்டி.

# அர்த்தமுள்ள பண்டிகை


20ம் நூற்றூண்டின் இறுதிக் கட்டத்திலே வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் விஞ்ஞானத்திலும் — வியத்தகு முன்னேற்றங்களிலும் படிப்படியாக முன்னேறிச் சென்று இந்த உலகத்தின் அதைச் சுற்றி வருகின்றகோளங்களின் ஆராய்ச்சிகளிலும், ஓர் உயர் நிலையை எட்டிப்பிடித்திருக்கின்றோம். கோளங்களின் தூரங்கள் - பரிமாணங்கள், எடைகள் அனைத்தையும், நிறுத்தி அளந்து பார்க்கின்ற அளவுக்கு நமது உலகம் முன்னேறிவிட்டது என்பது கண்கூடு.

ஆனால் கிறிஸ்தவ சமுதாயத்திலே வாழுகின்ற நாம், கிறிஸ்துவின் கண்ணோட்டங்களை - கிறிஸ்து உலகில் வந்த அளப்பெரும் செய்தியினை இன்னும் உணராமல் இருக்கின்றோம்! இது எமக்கு ஒரு வெட்கக்கேடாக அமைகின்றது இல்லையா?

பண்டு தொட்டு வழங்கி வந்த பாரம்பரியங்களிலே நாம் இன்னும் மூழ்கிக்கிடக்கின்றோமே! என்பதை எண்ணும் போது நாம் வெட்கித் தலை குனிய வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இன்னும் எமது இல்லங்களிலே - ஆலயங்களிலே வாடிக்கையான வேடிக்கை நிகழ்ச்சிகளும், தேவையற்ற ஆடம்பரச் செலவினங்களும், அர்த்தமற்ற விதத்திலே ஆடம்பரமாகக் கொண்டாடி மகிழ்வதில் ''கிறிஸ்தோதைய'' விழாவைக் கொண்டாடி அதிலே ஒரு நிறைவும் எய்தி மகிழ்கின்றோம்!

கிறிஸ்து இவ்வுலகில் மனித அவதாரம் எடுத்ததன் நோக்கத்தை - அதன் அர்த்தத்தை! நாம் ஏன் நினைப்பதில்லை?



ஒடுக்கப்பட்டவர்கள், உரிமைகள் மறுக்கப்பட்டவர்கள் - ஊரைவிட்டே ஓட ஓடத் துரத்தப்பட்டவர்கள் - அடைக்கலம் புகாவண்ணம் தடுத்து நிறுத்தப்பட்டவர்கள் - வாழ்விழந்து வழியிழந்து, சொந்தக்குடும்பம் என்ற ஒன்று இல்லாமல், துரத்தியடிக்கப்பட்டவர்கள் அனைவருக்கும் மீட்பைக் கொண்டு வரவே அவதரித்தார் யேசு.

எங்கள் விழா அர்த்தமுள்ளதாக அமைய இன்றைய ''கிறிஸ்தோதைய'' விழாவை மனமகிழ்வுடன் கொண்டாடுவோம். வெளி ஆடம்பரங்களில், வீண் செலவுகளை நாம் செய்யாது விணடிக்கப்பட்ட எங்கள் இன சகோதரர்களிலே யேசுவின் வருகையை அர்த்தமாகக் கொண்டாடுவோமா?

'சின்னஞ்சிறிய இந்தச் சகோதரர்களுக்கு நீங்கள் செய்யும் போதெல்லாம் எனக்கே செய்தீர்கள்'' என்ற யேசுவின் சவாலை ஏற்று அயலவர்களிலும், நண்பர்களிலும் - ஏழைகளிலும் - ஒடுக்கப்பட்டவர்களிலும், யேசுவின் அர்த்தமுள்ள பிறப்பைக் கண்டு மனமகிழ்வு எய்துவோமா?

இன்று இயேசுவின் பிறப்பு விழா - ஒரு சிறப்பு விழாவாக அமைய, ஆதரவற்றவர்களுக்கு அகதிகளாய் வாழ்வோர்களுக்கு, கைகொடுத்து உதவும் போது - ''எனக்கே செய்தாய்'' என்ற மனஉணர்வுடன் இன்றைய ''கிறிஸ்தோதய'' விழாவைக் கொண்டாடி மகிழ உங்கள் அனைவரையும், அன்புடன் அழைக்கும் -

எஸ். ஏ. நாதர்.

## வந்திடுவீர் பாலகனே

வந்திடுவீர் ! பாலகனே வந்திடுவீர் !!
வரமருளும் பரம்பொருளே, வந்திடுவீர்
பாவம் எனும் இருள் போக்க விண்மீனாய்
உதித்திட்ட பரமனின் புதல்வனே !
வந்திடுவீர் பாலகனே வந்திடுவீர் !

அன்பின் ஆழம் அனைவருக்கும் காட்டிடவே,
ஏழ்மையிலே பிறந்திட்ட யேசுபாலா !
ஆயுதமே வழிஎன்று அரசாளும் உலகிற்கு
அறிவொளி காட்டி வழி நடத்திடவே
வந்திடுவீர் ! பாலகனே வந்திடுவீர் !!

மனிதனை மீட்டிடவே இறைமகன் நீர்
மாட்டு தொழுவத்தில் மாணிக்கமாய் உதித்தீரே !
மந்தைகளாய் மக்களை மிதிப்பவர் இடம் நின்று
மக்களை காத்து நல்லாட்சி நடைபெறவே
வந்திடுவீர். பாலகனே வந்திடுவீர் !!

வழி தவறிய ஆடுகளாய் அலைந்திட்ட மக்களையே
வழிகாட்டும் மேய்ப்பனாக வந்துதித்த தேவபாலா
வன்செயலால் மனம் தளர்ந்து விசுவாச பற்றற்று
வழிதவறிய மக்களுக்கு நம்பிக்கை வழியாக
வந்திடுவீர் பாலகனே வந்திடுவீர் !

மாசற்ற மானிலத்தை ஆக்கிடவே
மாசற்ற மரியிடத்தில் மைந்தனாக உதித்தவரே
மாசென்பதை மறந்து மதிகெட்டு, மனித உயிரை
மதிப்பின்றி அழிப்பவரை அறவழியில் திருப்பிடவே
வந்திடுவீர் ! பாலகனே வந்திடுவீர் !

தன்னலமற்ற தாய் மரியின் மடியினிலே
தலையனாகத் தவழ்ந்த சற்குருவே
தம் பிள்ளைகளை பலிகொடுத்து பரிதவிக்கும்
தாய்மாரை தேற்றிடவே தனையனாக
வந்திடுவீர் ! பாலகனே வந்திடுவீர்.

உள்ளங்களை அன்பினாலே நேசித்து
எம் இதயங்களை செம்மறியாய் தேடிவந்த பாலகனே
உடைந்த எம் உள்ளங்களை நேசத்தால் நிரப்பிட
எம் உள்ளத்தில் பிறந்து, வாழ்ந்திட,
வந்திடுவீர் ! பாலகனே ! வந்திடுவீர்.

யோண்சன் ராஜ்குமார் காவலூர்.

## இறையுடன் இணைக்க வா !

ஆதிமனிதன் பாவம் போக்கி
அவனியைக் காக்க மீட்பரொருவர்
வருவார் என்று தந்தை சொன்ன
வாக்கு ஒன்றை நிறைவேற்ற.

வார்த்தை ஒன்று மனுவாகி
கர்த்தர் உருவில் மலர்ந்து வந்து
கன்னிமரியின் மடியின் மீது
சின்ன எழிலாய்த் தவழ்ந்தது.

விண்ணவர்கள் வாழ்த்துப்பாட
விண்மீன் வானில் வழிகாட்ட
மன்னவர்கள் வந்து தொழ
கண்மணியே நீ பிறந்தாய்

பாவப் பழுவை ஏற்க வந்தாய்
பாவி எம்மை மீட்க வந்தாய்
சாவினின்று மீண்டு—தூய
ஆவியாலே திடம் தந்தாய்

கரிய இருள் உலகினிலே
பரிவு இன்றி வாழ்கின்றோம்
உரிமை இழந்த மனிதர் எம்மை
மரிமகனே காத்தருள்வாய்.

எந்த நிலை வந்த போதும்
உந்தன் அன்பு ஒன்றே போதும்
இன்னல் தீயை அணைக்க வா !
இறையுடன் எம்மை இணைக்க வா !!

ஆக்கம்: செல்வி றுஷ்யந்தி இராஜேந்திரம்

## அமலன் யேசுவிற்கு என் வாழ்த்து



அன்னையின் திருமடியில்
ஆண்மகனாய் பிறந்திட்ட
இறைமகனும்
அமலன் யேசுவை
ஈன்றெடுத்த வையகமே
உள்ளத்தின் திருவிளக்காய்
ஊஞ்சலாடும் நம் மனதில்
எளியவரின் தோழனாய்
ஏழ்மையின் வள்ளலாய்
ஐயப்படுபவர்களின்
ஆறுதலாய்
அகதிகளின் நண்பனாய்
ஒளிர்விடும் கதிரவனின் உலகில்
ஓங்கிடும் வாழ்த்துக்களின்
மத்தியில்
உதித்திட்ட இத்தினத்தில் என்
வாழ்த்தும் ஒலிக்கட்டும்.

யோ. கிறிஸ்ரி பிரான்சிஸ்
சென் யேம்ஸ், இளவாலை.

## ஏன் நத்தார்?

ஓலை வேய்ந்த வீட்டில் வெடி வெடிக்கிறது
நத்தார் வந்துவிட்டது
ஓலை சாய்ந்த வீட்டில் இடி இடிக்கிறது
நத்தார் வந்து விட்டது

எழில் மிளிர்கிறது செல்வர் இல்லங்களில்
நத்தார் வந்து விட்டது
இருள் நிறைகிறது ஏழை உள்ளங்களில்
நத்தார் வந்து விட்டது

புசிக்க அறுசுவையுணவு. மாளிகையில்
நத்தார் வந்து விட்டது
பசிக்கு ஒரு உணவில்லை ஏழையிடம்
நத்தார் வந்து விட்டது

விந்தை உடைகள் அணிகிறார்கள் கோபுரத்தில்
நத்தார் வந்து விட்டது
கந்தை உடைகள் துவைக்கிறார்கள் குடிசையில்
நத்தார் வந்து விட்டது

களிதரும் கீதங்கள் மாடமாளிகையில்
நத்தார் வந்து விட்டது
அழுகையின் ஓலம் மண்சிறுகுடிலில்
நத்தார் வந்து விட்டது

இந்த நிலைமைகளை ஏற்றத்தாழ்வுகளை
நொந்த மனிதர்களின் இதயத்தின் நோவு துயரங்களைத்
சிந்திக்கச் சிந்தையில்லாதவர்கள் ஓடுகிறார்கள்
வந்திங்கு ஆலயத்தில் ஒன்று கூடுகிறார்கள்

செல்வி:- மைக்கல் றெஜினு ஜெயஸ்
புங்குடுதீவு.

# வார்த்தை மனுவுருவானார்

அன்று ஒருநாள் நாடு முழுவதும் ஒரே பனிப்படலங்கள். இளம் தென்றல் ஜில் என ஓலமிட குளிர்வாடை வீசியது. எங்கும் ஒரே இருள்மயம்.

கிறிஸ்துவின் வருகையைப் பலரும் பலவாறு தங்களின் ஆசைக்கும், தேவைக்கும் தக்கவிதமாய் சிலர் அரசனாக மாடமாளிகையில் பஞ்சுமெத்தையில் பிறப்பார் எனவும், சிலர் போர் வீரனாகப் பிறப்பார் எனவும் எதிர்பார்த்தனர். ஆனால்???

அரசனின் கட்டளையை ஏற்று பெத்தலகேமை அண்மித்துக் கொண்டிருந்த மரியாள் பிரசவவேதனையால் துடித்தாள். தங்குவதற்கு இடம்தேடித் தவித்தார் சூசை. பணத்திமிரும் பெருமையும், கொண்ட மக்கள் தங்கள் முகத்தைத்திருப்பி தங்களிடம் இல்லையென்று விரட்டினர். குளிரும் இருளும், ஒருபுறம், மக்களின் விரட்டல் மறுபுறம், சற்றில் ஊருக்கு வெளியே ஒதுக்குப் புறத்தில் ஒரு மாட்டுத் தொழுவத்தில் மாடுகள் மத்தியில் மனிதர்களின் உறவை விடுத்து எவரும் எதிர்பாராத விதமாகப் பாலகன் பிறந்தார்.

எம்மத்தியிலும்பலர் பிரசவ வேதனையால் துடித்த மரியாளுக்கு இடம்கொடாத யூதமக்களைத் திட்டிச் சபிக்கிறோம். கல்நெஞ்சக்காரர் என வெறுக்கிறோம். ஆனால் அன்றைய யூத மக்களைப்போல் நாமும் கிறிஸ்துவுக்குஇடமில்லையென்று விரட்டுகின்றோம். எப்படித் தெரியுமா?

கிறிஸ்துவைத் தாங்கிவரும் எம் அயலவனை சீறிச்சினக்கும் போது நாம் கிறிஸ்துவை அல்லவா புறக்கணிக்கிறோம்.

மார்கழிப்பனி கொட்டுகிறது. நள்ளிரவில் ஆலயமணிகள் ஒலிக்கின்றன. கீதங்கள் தொனிக்கின்றன. பட்டாடை உடுத்திக்கொண்டு ஆலயத்துக்குப் போகிறோம் ஏன்? பாலகன் பிறந்து விட்டார் அவரைப் பார்த்து வணங்குவதற்கு, ஆனால் பாலகன் என்ன கூறுகிறார்.

"என்னை மாட்டுக்கொட்டிலில் கண்டு வணங்குவதைவிட நான் பிறந்துள்ள பிறரின் இதயங்களை வணங்குங்கள்"

நாகரீகம் தாண்டவமாடும் இவ் இருபதாம் நூற்றாண்டில் மக்கள் பண ஆசையால் போராடுகின்றனர். பதவிக்காகப் பதறுகின்றனர். எங்கும் எரிச்சலும், காய்மகாரமும் சண்டையும் சச்சரவும்.

ஆகவே கிறிஸ்மஸ் தினத்தைக் மகிழ்ச்சியாகக் கொண்டாடுவதற்கு குடும்பத்தில். அயலவரில், ஊரில். நாட்டில் ஏன் உலகிலேயே சமாதானம் வேண்டும் ஆம் மாட்டுக் கொட்டிலுக்குச் சென்று மெழுகுதிரி எரிப்பது இலகுவானது. ஆனால் எம் அயலவனில் கிறிஸ்துவைக் காண்பது கடினம். மாட்டுக்கொட்டில் தொடக்கம் கல்வாரிமலை மட்டும் தன் வாழ்வை பிறர்வாழ்வுக்காகத் தியாகம் செய்த இயேசு பிரான் எம்மையும், அன்பு செய், அன்பு செய் என்று பிரசங்கிக்கிறார்.

றெக்ஸி வில்பிறட்,
தாழையடி.



## வரமாட்டாயா இறைவா ?



பூபாளம் பாடுகிறேன் மரிபாலா
நீ துயிலெழ.
விரும்பியே வாடுகின்றேன்,
விழி சோர ஏங்குகிறேன்.
நீ என்னிடம் வர.

நீ மண்ணுலகில் மீண்டும் ஜனிப்பதற்கு—இன்று
மாட்டுக் கொட்டிலொன்றைத் தேடுகின்றேன்.
ஓ! மறந்து விட்டேன், என் மனமும்கூட மாளிகையல்ல
மாட்டுக் கொட்டிலே என்றுணர,

என்னிடத்தில் மஞ்சமில்லை! —ஆனால்
மஞ்சத்தை வென்றுவிடும் நெஞ்சமுண்டு
கடுங் குளிரில் உனைப் போர்த்திவிடக் கம்பளியுமில்லை-ஆனால் மனக்
கந்தலிலும் உனை மறைத்து விடும் ஆர்வமுண்டு.

நான் வேந்தனல்ல, ஆதலால் என்னிடம்
வெள்ளித் தூபமில்லை — ஆனால்
அதைவிட அற்புதமாக
சோதனைத் தீயில் புடமிட்ட ஓர் உள்ளமுண்டு.

பாவி என்னிடம் உனக்களிக்க
பொன்னகை ஒன்று கூட இல்லை—ஆனாலும்
உனை இனிதாக வரவேற்க
புன்னகையோ அதி ஏராளமுண்டு.

மன்னவனே உனக்களிக்க
முத்து மணிச் சரங்களில்லை—ஆனால்
முத்து மணிச் சரத்தைவிட, அற்புதமாய் கமகமக்கும்
குண்டு மல்லிச் சரங்களுண்டு.

சிறு புதல்வா—நினக்கு புகட்டிவிடப் பாலோ
பூசிவிட நறுந்தேனோ
என்னிடம் கொஞ்சமும் இல்லை—ஆனால்
உனை நனைத்தெடுக்க அன்பு ஊற்றும்
பிணைத்து விடப் பாசக் கயிறும்
மிக அதிகமாகவே என்னிடமுண்டு.

கறைபட்ட சிறு இதயத்தையும்
வற்றாத இரு விழிகளையும் தவிர
வேறொன்றுமேயில்லை உனக்களிக்க—ஆனால்
வாஞ்சையுண்டு உனையழைத்து விருந்தளிக்க—இனியாவது
சீக்கிரமாய்
என்னிடம் வரமாட்டாயா இறைவா?—நான் தேடும்
ஆறுதலைத் தரமாட்டாயா இறைவா ??

A.R. இந்திரா பெர்னாண்டோ, பதுளை

# புதுவாழ்வை அமைப்போம் மலரவிருக்கும் புத்தாண்டில்

மனிதன் என்பவன் மென்மையான உள்ளத்தையும் உயர்ந்த எண்ணங்களையும் நல்ல பண்புகளையும் கொண்ட வெள்ளை மனம் படைத்தவனாகவே இவ் உலகில் பிறக்கின்றான். இவன் நல்லவனாவதும் தீயவனாவதும் அன்னையின் வளர்ப்பில்தான் அடங்கியிருக்கிறது. கருவறையில் தொடங்கிய வாழ்க்கை கல்லறையில் மறையும்வரை வேதனைகள். சோதனைகள், வெற்றிகள், தோல்விகள் எனபன சுழல் சக்கரம்போல் மாறிமாறி ஏற்படுகின்றன. கரடுமுரடான மேடுபள்ளம் நிறைந்த வாழ்க்கையில் மனிதன் விழிப்பாக நடந்து செல்ல வேண்டும். தவறினால் சறுக்கி விழுந்து விடுவான் வாழ்க்கையென்பது வாழ்வதற்குத்தான் எனவே எமது ஆயுள் முடியும்வரைக்கும் நாம் இவ் உலகில் வாழ்ந்து முடிக்கும் நாட்கள் எண்ணப்பட்டிருக்கின்றன. நாம் எப்படியும் வாழலாம் என்பதை விட இப்படித்தான் வாழ வேண்டும் எனும் எமக்கு நாமே சில நெறிமுறைகள் அமைத்து அதனுள் நாம் வாழ்ந்து வருவோமாகில் அதுவே வாழ்க்கையின் தத்துவமாக அமைந்துவிடுகிறது என்பதை யாரும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது.

மனித வாழ்க்கை குறுகியதுதான். இருந்தாலும் அதனை இனிமையாக்குவதும். கசப்பாக்குவதும் நம் ஒவ்வொருவரின் செயற்பாடுகளில்தான் தங்கியிருக்கின்றது என்பதை மறந்துவிடக்கூடாது. நிலையற்ற எம் வாழ்க்கையில் நிலையானவற்றை நாம் இவ் உலகிற்குச் செய்ய வேண்டும். மனிதன் ஒவ்வொருவனும் தனித்தனி ஆற்றல்கள், சிந்தனைகள், திறமைகள், பண்புகளைக் கொண்டவனாக இருக்கின்றான் இவையனைத்தும் கடவுள் அவனுக்கு கொடுத்த அரும் பெரும் கொடையாகும். எனவே இவற்றை நாம் வளர்ப்பதால் எமது வாழ்வையும் நாம் வளமாக்க முடியும்.

இளமை என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரே ஒரு தடவை ஆண்டவனால் பரிசளிக்கப்படும் காலமாகும். இக்காலத்தில் இளைய தலைமுறைகள் ஒவ்வொருவரும் தமது குறிக்கோள்களைத் திட்டமிட்டுக்கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறார்கள். வாழ்வை வளம் படுத்த குறிக்கோள் முக்கியமானதாகும். குறிக்கோள் இல்லாத வாழ்க்கை உப்பில்லாத உணவுபோல் ஆகிவிடுகிறது. நாம் எமது குறிக்கோள்களைத் தெரிவு செய்யும்போது எமது ஆற்றல் அறிவு என்பவற்றிற்கு அமையத் தெரிவு செய்ய வேண்டும். அவ்வாறு தெரிவுசெய்யும் திட்டம் நிறைவேறும் வரை எமக்கு உறுதியான மனநிலை அத்தியாவசியமாகும். இத்திட்டங்களை நிறைவேற்றுவதில் இடைஞ்சல்கள் கஷ்டதுன்பங்கள் என்பன குறுக்கிட்டாலும் நாம் அவற்றைக் கவனத்தில் எடுக்காது எடுத்த உறுதியை அசைக்கவோ அழிக்கவோ முடியாதவையாக இருக்க வேண்டும். வாழ்க்கையின் முன்னேற்றம் என்பது மனித முயற்சியில்தான் தங்கியிருக்கின்றது. முயற்சித்தால் செய்ய முடியாதது என்று ஒன்றும் இருக்கப்போவதில்லை. முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார், மெய்வருந்தக்கூலி தரும் என்பது போல எமது முயற்சியும் உழைப்பும் ஒருபோதும் வீணாகாது, அதற்குத் தகுந்த சன்மானத்தை நிச்சயம் பெறுவோம்.

மேலும் எமது வாழ்க்கையில் நேரம் பொன்னானதாகும். அவற்றை நாம் நல்ல முறையில் பயன்படுத்துவதால் நாம் எதிர்பார்க்கும்குறிக்கோள்களை இலகுவாக அடையக் கூடியதாகவும் உள்ளது. எனவே மலரவிருக்கும் புது ஆண்டில் எமது வாழ்வை வளப்படுத்தி சமூகத்தை முன்னேற்ற முயற்சிப்போம். இச் சமூகம் எமக்கு என்ன செய்த என எண்ணாது சமூகத்திற்கு நான் என்ன செய்தேன் என எண்ணி ஒவ்வொரு நிமிடங்களையும் பயனுள்ள விதத்தில் செலவிடுவோம்.

விளிஷ்யா சுறேந்தினி
ஆரோக்கியநாதன்
திருக்குடும்ப கன்னியர் மடம்
யாழ்ப்பாணம்.

## யேசு தேவன்

மார்கழி குளிரினிலே
மாமரி மடியினிலே
தோன்றிய தேவபாலனே
ஸ்தோத்திரம் செய்கின்றோம்
குடிலினிலே எமக்காய்
உதித்தவரே
குற்றங்கள் நீயும்
பொறுத்திடுவாய்
மோட்ச வழி பெற்றிடவே
முன்னின்று வழியும்
காட்டிடுவாய்
பாலர் உம்அருளில்
மலர்ந்திடவே
பாலனே நீயும் தோன்றிடுவாய்
நற் செயல்கள் நம்மில்
வளர்ந்திடவே
நல்கிடுவாய் தேவபாலா

பாவ இருளிலே நிறைந்திட்ட
பாரின் மாந்தர் அனைவருமே
இறை வழியில் நடந்திடவே
இறை ஒளி நீயும் அருளிடுவாய்

அகந்தை ஆணவம் நம்மிடை
அகன்று ஓடி அழிந்திடவே
அன்பு ஒன்று எம்மிடை
ஆறாய் ஓடிப் பெருகிடவே

நிம்மதியின்றி அலைந்திடும்
நின்தன் மக்கள் எங்களுக்கே
நீதியின் ஊற்றே தேவனே
நிரந்தர அமைதி தந்திடுவாய்

செல்வி டொறின் சவரிப்பிள்ளை

## காங்கேசன்துறை நடேஸ்வராவில் ஒளிவிழா

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் 16-11-88 அன்று கத்தோலிக்க மாணவர்கள் ஆசிரியர்கள் ஒளி விழாக் கொண்டாடி மகிழ்ந்தனர். பாடசாலை அதிபரும், ஊறணிப் பங்குத்தந்தை வண. இ. ஸ்ரலின் அடிகளும் குத்துவிளக்கேற்றி விழாவைக் கோலாகலமாக ஆரம்பித்து வைத்தனர். அதிபர் தனது உரையிலே யேசுக்கிறிஸ்து அன்றுமாட்டுத் தொழுவத்திலே பிறந்தாலும் இன்றைய மனிதருடைய வாழ்க்கைக்கு அவருடைய போதனையும் வாழ்வும் ஒரு சவாலாக அமைகின்றது என்றார்.

''ஒவ்வொரு சமயத்தவரும் இறைவனை ஒளியாகக் கண்டார்கள் ஆனால் கிறிஸ்தவர்களோ அந்த ஒளியாகிய கடவுளே யேசுவின் வடிவிலே இவ்வுலகிலே வந்து உதித்தார் என்று அனுபவிக்கிறோம்'' என அருள் தந்தை தனது உரையிலே குறிப்பிட்டார். மறையாசிரியர் ம. ஜெயசீலன் ''நானே உலகின் ஒளி'' என்று கூறிய கிறிஸ்துவின் பிறப்பை கொண்டாடுகின்ற வேளையில் அவருடைய போதனைப்படி வாழ்வதே சிறந்தது என எடுத்துரைத்தார்.

கிறிஸ்துவின் பிறப்புப்பற்றிய நாடகம் வில்லிசை, தாளலயம், பாடல்கள், நாட்டிய நாடகம் ஆகியன கல்லூரி இந்து மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் பாராட்டைப் பெற்றது. இந்நிகழ்ச்சிகளிலே தாமும் பங்கேற்று திறமையாக பங்களிப்புச் செய்த இந்து மாணவ மாணவிகளின் பரந்த மனம் பாராட்டப் படவேண்டிய ஒன்று. தேனீர் விருந்துடன் ஒளிவிழா இனிதே முடிவுற்றது இந்நிகழ்ச்சிகள் அனைத்தையும் ஒழுங்கு செய்து திறமையாக முடிவுறச் செய்த பெருமை இக்கல்லூரியில் கற்பிக்கும் மறையாசிரியர் மலதா, ஆசிரியை சந்தியாகோவையுப் சாரும்

அனைத்து இந்து ஆசிரியர்களும மாணவர்களும் கலந்து கொண்டு இவ்விழாவைச்சிறப்பித்தமை மறக்க முடியாத ஒரு அனுபவமாக அமைந்தது

அருளானந்தம் புஸ்பா

## புனித திரேசம்மாள் சபையின் ஆண்டு விழா

யாழ். அடைக்கல அன்னை ஆலய இளம் பெண்களுக்கான சபையான, புனித திரேசாமாள் கூட்டமானது 1980 ம் ஆண்டு கார்த்திகைத் திங்கள் 21 ம் நாள் அருள்திரு. A சேவியர் குரூஸ் அடிகளால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. தொடர்ந்து பங்குத் தந்தையாய் இருந்த அருள்திரு. E. J. அருமைநாயகம் அடிகளாரின் அரிய முயற்சியினால் இச்சபையானது வளர்ந்து ஆலயம் துப்பரவுசெய்தல், திருவிழாக்காலங்களில் தகுந்த ஒத்துழைப்பு நல்குதல், மறைப் பணி ஆற்றுதல், வயோதிப சாலையைத் தரிசித்தல், மரண வீடுகளில் செபித்தல், வாராந்த சிந்தனைக்கு வாசகங்கள் பொருத்துதல் போன்ற இன்னோரன்ன பணிகளில் ஈடுபட்டு வந்தது. தற்போது குருக்களாய் இருக்கும் முன்னை நாள் புனிதசவேரியார் குருமட அருட் செல்வர்களின் உரைகளால் சபையானது, புத்தூக்கம் பெற்று ஆன்மீக, அறிவு வளர்ச்சியில் முன்னேறி வந்தது. தொடர்ந்து அருள்திரு. பொன்னையா அடிகளின் வழிநடத்தலில் இயங்கி வரும் சபையானது வருங்காலத்தில் மேலும் வளர்ந்து நற்கனி பயக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

சென்ற கார்த்திகைத் திங்கள் 27 ம் நாள் காலை 10.30 மணிக்கு அருள்திரு. பிலிப் பொன்னையா அடிகள் விளக்கேற்றி 8 வது ஆண்டு நிறைவு விழாவை ஆரம்பித்து வைத்தார். முன்னை நாள் தலைவியின் செபத்தின் பின்னர் தலைவி வனிதா. P. வரவேற்புரை வழங்கினார். அங்கு நடைபெற்ற கலைநிகழ்ச்சிகளும், சிறு விருந்தும் மனதிற்கு இதமளித்தன. தொடர்ந்து பங்குத் தந்தை ''செபவாழ்வின் முக்கியத்துவம்'' பற்றிய சிறப்புரை ஆற்றினார். தொடர்ந்து பழையதலைவியின் அறிவுரையுடனும் S. கரோலினின் நன்றியுரையுடனும் விழா 12.30 மணியளவில் இனிதே முடிவுற்றது.

தகவல்:-
செல்வி. லூசியா சூசைப்பிள்ளை

## பலாலி ஆசிரியர் கலாசாலையில் ஒளி விழா

''இருள் சூழ்ந்த உலகில், ஒளியேற்றப்படுகிறது. உலகில் தெய்வ நம்பிக்கை அதிகம். எங்கும கோயில்கள், எங்கும் பக்தர்கள். ஆனால் எவ்வளவுக்குக் கோயிலும் வழிபாடும் பெருகுகின்றனவோ, அவ்வளவுக்கு பாவங்களும் பெருகியுள்ளன''.

இவ்வாறு அருள் திரு. செல்வரத்தினம் அடிகளார் அண்மையில் பலாலி ஆசிரியர் கலாசாலையினரால் கோப்பாய் சப்த மண்டபத்தில் நடாத்தப் பெற்ற ஒளிவிழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்தும்போது குறிப்பிட்டார் அவர் மேலும் உரையாற்றுகையில் ''தனி மனிதன் உள்ளத்தில் சமாதானம் ஏற்படாவிட்டால். சமூகத்தில் சமாதானம் ஏற்படமாட்டாது. சமூகத்திலே சமாதானம் ஏற்படாவிட்டால் நாட்டில் சமாதானம் ஏற்படமாட்டாது. மரணம்கூட நமக்கு அதிர்ச்சி தருவதில்லை'' என்றார்.

அவரைத் தொடர்ந்து கூட்டுத் திருப்பலி நிறைவேற்றிய அருட்தந்தையர்கள் நேசநாயகம், ஜெபநேசன் அடிகளாரும் உரைநிகழ்த்தினர். ''எந்த விதத்தில் தமிழ் மக்களை இருள் சூழ்ந்துகொண்டாலும், அவர்கள் ஒளியிலே வாழத் திடசங்கற்பம் பூண்டுள்ளார்கள் என்பதை இவ் ஒளிவிழா காட்டுகின்றது'' என்று அருட தந்தை நேசநாயகம் குறிப்பிட்டார். அருட்திரு. ஜெபநேசன் அடிகளார் தமது நத்தார்ச் செய்தியாக ''வெள்ளத்தனைய மலர்நீட்டம் மாந்தர் தம் உள்ளத்தனைய உயர்வு'' என்பதைத் தந்தார்.

உரைகளைத் தொடர்ந்து கலைநிகழ்ச்சிகளோடு ஒளி விழா இனிதே முடிவுற்றது.

தகவல்: M. M. அல்பிரட்

## கரவையூரில் மரியாயின் சேனையார்

கரவையம்பதி புனித அந்தோனியார், பரலோகமாதா ஆலயப் பங்கில் பங்குக்குருவாக பணியாற்றிவரும் அருள் திரு ஜெறோம் செல்வ நாயகத்தின் அயராத முயற்சியினாலும், அன்பு, சாந்தம், அமைதி, இன்முகம் போன்ற அணுகு முறைகளினாலும் நாளொரு மேனி பொழுதொரு வண்ணமாக வளர்ந்து வரும் மரியாயின் சேனையாளர்கள் இன்றைய (இன்னல், இடையூறுகள், பயங்கரங்கள், மனிதப்பலிகள் நிறைந்த) இக்கட்டான சூழ் நிலையிலும் ஆற்றிவரும் தொண்டுகள், சேவைகள் மிகவும் போற்றுதற்குரியன. ''மக்கள் சேவையே மகேசன் சேவை'' என்பதற்கிணங்க மரியாளின் பண்புகளையும், மதிப்பீடுகளையும் தம்மகத்தே கொண்டு குறிப்பாக குறிப்பறிந்து பணிபுரியும் பண்புகள், செபத்தோடு கூடிய அர்ப்பண வாழ்வு, அர்ப்பணவாழ்வில் பிரமாணிக்கம், பங்குத்தளங்களில் காட்டிவரும் கரிசனைகள் பலரையும் கவர்ந்துள்ளன.

இவர்களது பணி என்றும் சிறந்தோங்கிட வாழ்த்துகிறேன்.

தகவல்:-
வி. ஜி. குணநாயகம் அ.ம.தி.
கரவெட்டி

## தாய்மார்களுக்கான சிறு உதவி

மன்னார் மறைமாவட்ட ஆயரும் போஷகருமான வணக்கத்துக்குரிய ஆண்டகை தோமஸ் சவுந்தரநாயகம் அவர்கள் ம. து. ம. சங்கத்தினால் விறகு வெட்டிப் பிழைக்கும் தாய்மார்களுக்கு உபகரணங்களை வழங்கும் வைபவத்தில் உரையாற்றுகையில்:

''உங்களில் பலர் விதவைகளாகவும் நாளாந்தம் விறகு வெட்டி விற்று கூலிவேலை செய்யும் தாய்மார்களாகவும் காணப்படுகின்றீர்கள், இங்கு பெருந்திரளாக முஸ்லிம் தாய்மார்கள் வந்திருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும் அத்துடன் இந்து சமய பௌத்த மத குருக்களும் இரண்டு பள்ளிவாசல் நம்பிக்கையாளர்களும் சமூகம் தந்திருப்பது இச்சங்கத்தின் அரிய சேவைக்கு ஒரு எடுத்துக்காட்டாகும். இச்சங்கம் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் நான் இச்சங்கத்தின் போஷகர்களில் ஒருவராக இருந்து வருகின்றேன். இச்சங்கம் படிப்படியாக வளர்ந்து இன்று பல பொதுச் சேவைகளில் ஈடுபட்டுள்ளது. இன்று உங்களுக்குத் தரப்படும் காட்டுக்கத்தி, கோடாரி, கொக்கைச்சத்தகம் என்பவற்றைத் தகுந்த முறையில் பாவிப்பீர்களென எதிர்பார்க்கின்றேன். இதனால் கிடைக்கப்பெறும் சிறுவருவாயைக் கொண்டு உங்கள் வாழ்க்கையில் முன்னேறுவீர்கள் என எதிர்பார்க்கின்றேன்'' என்றார்.

கடந்த மாதம் துயர்துடைப்புச் சங்கத்தினால் 150 தாய்மார்கள் தெரிந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு அவர்கள் செய்யும் தொழிலுக்குரிய உபகரணங்கள் சிறுவர் பராமரிப்பு நிதியத்தின் உதவியுடன் வழங்கப்பட்டது. இது சம்பந்தமாக செயளாலர் கருத்துத் தெரிவிக்கையில், பல தாய்மார்கள் சிறு ஊதியம் தேடுவதற்காக அருகில் உள்ள காடுகளில் விறகு வெட்டி அவற்றை விற்றுப் பிழைப்பதுண்டு. போதிய உபகரணங்கள் இல்லாமையினால் கஷ்டப்படுவதைக் கருத்தில் கொண்ட இச்சங்கம் மன்னார் டிலாசால் தொழில்நுட்ப பயிற்சிச் சாலையில் இருந்து காட்டுக்கத்தி, கோடாரி, கொக்கைச் சத்தகம் போன்றவற்றை உருவாக்கி மேற்படி தாய்மார்களுக்கு வழங்கியது. மேலும் பலருக்கு இவ்வாறு உதவி செய்வதற்கு இச்சங்கம் முனைந்துள்ளது. இவ்வைபவத்திற்கு சிறுவர் பராமரிப்பு நிதியத்தின் சார்பில் செல்வி கொலற்றும் மத பிரதி நிதிகளும்கலந்துகொண்டனர்.

## நவாலிப் பங்கில் பிரசீடிய விழாக்கோலம்

நவாலிப் பங்கைச் சேர்ந்த மரியாயின் சேனை பிரசீடிய விழா, கடந்த 28-11-88 அன்று நவாலி சென் பீற்றேஸ் ஆலய முன்றலில் சேனைத் தலைவி திருமதி லூர்துமேரி அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது.

'இரக்கத்தின் மாதா' வளர்ந்தோர் பிரசீடியமும், ''சம்மனசுகவின் இராக்கினி இளைஞர் பிரசீடியமும் இணைந்து நடாத்திய அவ்விழாவிற் கலந்து கொண்ட யாழ். கியூறியா இளைஞர் பிரசீடியத் தலைவி வைலற் இம்மனுவேல் அவர்கள் உரையாற்றும்போது சேனையின் நோக்கம் செபத்தாலும் தேவ ஊழியத்தாலும், அங்கத்தினரைப் புனிதப்படுத்துவதேயாகும். சேனை எனக்கு என்ன செய்தது என்று மற்றவர்கள் கேள்வி கேட்காத அளவிற்குச் சேனையார் சேவையில் ஈடுபடவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

யாழ் மறைவட்ட வளர்ந்தோர் கியூறியாத் தலைவர் திரு. யோ. தார்சியஸ் அவர்கள் மறைந்த சேனை ஸ்தாபகர் திரு. பிராங் டவ் என்பவரைப் பற்றிக் குறிப்பிட்டு அவரின் நோக்கம் நிறைவேறச் சேனையார் உழைக்க வேண்டும் எனக் கூறினார்.

பங்குத்தந்தை அருள்திரு. K. B. சந்தியாப்பிள்ளை அடிகள் சேனையின் தொண்டுகளைப் பாராட்டினார். மரியன்னையின் மாண்புகளை மையப்பொருளாகக் கொண்ட நடனம், நாடகம், வில்லிசை, மெல்லிசை, கவிதை ஆகிய கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்று விழாவிற்கு மெருகூட்டின.

சேனையின் செயலர் திருமதி அருளம்மாவின் நன்றியுரையுடன் விழா நிறைவு பெற்றது.

திருமதி அருளம்மா.

# மாட்டுத் தொழுவத்தில் மங்கையின் பிரசவ வேதனை

'உலக இரட்சகராகிய யேசு பிரான்' பிறக்க வேண்டிய நேரம் அண்மிக்கின்றது. "உலக மூழுமையும் மக்கள் தொகையைக் கணக்கிடும்படி செசார் அகுஸ்துவிடமிருந்து கட்டளை பிறந்தது." (லூக். 2: 1) இறைமகன் யேசுவை இவ்வுலகிற்குக் கொண்டுவர இருக்கும் அன்னை தான். எனவே இந்தக் கணக்கெடுப்பிலிருந்து எனக்கு விதிவிலக்கினைக் கேட்கவில்லை அன்னை மரியாள் பலமைல்கள் தொலைவைக் கடந்து செல்லுகின்றாள். பயமில்லாமல் பயணத்தைக் தொடருகின்றாள்.

இரட்சகரின் தாயாகிய மரியாளுக்குத் தங்குவதற்கு வீடோ, சத்திரமோ கிடைக்கவில்லை. தங்குவதற்குக் கிடைத்ததோ மாட்டுத் தொழுவம் தான். புதிய இடத்திலே பிரசவ வேதனையுடன் தனிமை! இந்த இளம் மங்கையை வாட்டியிருக்கும். இளம் தம்பதிகள் தட்டாத கதவுமில்லை. தேடாத சத்திரமுமில்லை. அலையாத தெருவுமில்லை எங்கும் கிடைத்த பதிலோ ஐயா! இடமில்லை! நான் இறைமகன் கிறிஸ்துவை நீங்கள் பல்லாண்டு காலமாக எதிர்பார்த்திருந்த மெசியாவை இந்த உலகத்திற்குக் கொண்டு வர இருக்கும் தாய்! எனக்கு உங்களால் ஓர் இடம் தரமுடியாதா? என்று வீராப்புடன் கேட்கவில்லை மரியாள்! பல கிரமங்களைக் கடந்து நீண்ட தூரம் பயணம் செய்தவர்களுக்குக் கடைசியாகக் காத்திருந்தது மாட்டுத் தொழுவம்தான் காலமோ கடுங்குளிர்!

பிரசவ வேதனையால் இந்தக் கடுங்குளிரில் அவதியுறுகின்றாள் அன்னை! இந்த வேதனையிலும் கூடகட்டியகணவனைப்பார்த்து முணுமுணுத்தது கிடையாது. வேறோர் கணவனாய் இருந்திருந்தால் எப்பாடுபட்டும் சத்திரத்தில் ஓர் இடம் எடுத்துத் தந்திருப்பார் என ஏங்கியதும் கிடையாது. மரியாள் மகப் பேற்றுக்காக மருத்துவ மனையையோ அன்றி மருத்துவ மாதுவையோ தேடவில்லை. இறைவனின் துணிவோடு ஏழ்மையான சூழ்நிலையை ஏற்று வாழ்கின்றாள். "அவள் தலைப் பேறான மகனை ஈன்றெடுத்து துணிகளில் பொதிந்து முன்னிட்டியல் கிடத்தினாள்" (லூக் 1 : 7)



சொந்த ஊரிலே அவர்களுக்குத் தங்க இடம் கிடைக்கவில்லை. பிறந்த குழந்தையையும், அந்தக் குழந்தையைப் பெற்றெடுத்த பெற்றோர்களை வாழ்த்த, பாராட்டுக்களைத் தெரிவிக்க, அன்பளிப்புகள் கொடுக்க உற்றார் உறவினர், நண்பர் எவருமே வரவில்லை. வந்தவர்களோ ஏழ்மை இடையர்கள் தங்கள் ஆட்டு மந்தைகளுக்கு சாமக்காவல் காத்திருந்த இடையர்கள் மாட்டுத் தொழுவம் சென்று மரியாளையும், சூசையையும், முன்னிட்டியில் கிடத்தியிருந்த 'தெய்வக் குழந்தையையும்' கண்டனர். (லூ. 2 : 17) தாங்கள் வான தூதர்கள் வாயிலாகக் கேட்ட தனைத்தையும் மரியாளுக்குச் சொல்லி வியந்தனர்

இவற்றைக் கேட்ட மரியாள் பெருமை பாராட்டவில்லை. இந்தக் குழந்தையைப் பெறுவதற்காகத் தான் பட்ட துன்பங்கள்; சொல் லொண்ணாத் துயரங்கள், சோதனைகள், வேதனைகள் தான்சாதித்த சாதனைகள்; இத்தனையையும் வைத்து அவள் உரையாற்றவுமில்லை மாறாக இந் நிகழ்ச்சிகளையெல்லாம் உள்ளத்திலிருத்தச் சிந்தித்து வந்தாள். (லூக். 1 : 2?)

"போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து" இந்தத் தத்துவத்தை தன் வாழ்க்கையிலே வாழ்ந்து காட்டியவள் மரியன்னை! கிடைத்ததைக் கொண்டு திருப்தியாக வாழ்ந்து காட்டிய உத்தமி! இன்னல்கள், இக்கட்டுகள் சோதனைகள், வேதனைகள் மத்தியிலேயும் துணிவுடன் இறைமகன் கிறிஸ்துவைப் பெற்று இவ்வுலகிற்குக் கொடுக்கின்றாள் இந்த வீரமாது!

'புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?" பயமகற்றிய மரியன்னை துணிவுடன் ஈன்றெடுத்த விடுதலை வீரன் யேசுவும் அஞ்சாது, எதற்கும் பின் வாங்காது அடக்கப்பட்ட பக்களுக்காக; அவர்களது உரிமை வாழ்வுக்காகத் துணிவுடன் குரல் கொடுத்ததுமல்லாமல் இறுதியாகத் தன்னுயிரையே தரணியர்க்குத் தியாகம் செய்த 'தியாகச் செம்மல்' "தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டுமோ"?

இவ்வாறாக மரியாள் எதற்கும் துணிந்தவள்! தன்னுடைய வாழ்க்கையையே ஒரு சவாலாக ஏற்றவள்! ஒதுங்கி வாழ்ந்த வாழ்க்கைப் பிரச்சனைகளை எதிர் கொண்டு நின்று வெற்றிகண்ட வீரமங்கை இவள்! வாழ்க மரியன்னை!! உலகில் ஓங்குக இவள் நாமம்!!!.

M. வுளோறன்ஸ் சூசைதாஸ்
இளவாலை

# கீழ்த்திசையிலே அற்புதத் தாரகை

யேசு பிறந்தார் பாலன் யேசு பிறந்தார் லோக
மாசு அகற்றி அன்பும் உறவும் நிலைத்திடச் செய்யவே
பெத்லகேம் எனும் புனித சிற்றூரின் ஒளியாய்
பரிசுத்த அன்னை மரியாளின் செல்வனாய்
ஊரின் ஒதுக்குப் புறத்திலே மாட்டுத் தொழுவத்திலே
உலர்ந்த வைக்கோல் படுக்கையின் நடுக்குளிரின் இரவிலே
(யேசு பிறந்தார்)

கீழ்த்திசையிலே அற்புதத் தாரகை ஒன்று அருட்
குழந்தையின் வரவை உலகோர்க் குணர்த்திட
தோன்றி நின்றதை ஆயர் கண்டு வியந்தார்—அவ
தாரமகிமையை மூன்று வேந்தர் அறிந்தார்.
(யேசு பிறந்தார்)

அன்னை மடியிலே ஞான மோனத்துயிலே சுகமாய்
ஆழ்ந்திருந்த தேவ சிசுவை தரிசிக்கவே பரிசு
கொண்டு வந்தார் மூன்று தீர்க்கதரிசிகள் நிதி
கண்ட ஏழைகளைப் போல களித்து நின்றார்கள்.
(யேசு பிறந்தார்)

பாவத்தின் கொடுமைகளை உயர்ந்த போதனையாலே
புகட்டி மக்களை உய்விக்க வந்த பெருமான்
ஆண்டவர் அருளார் மைந்தன் யேசு கிறிஸ்து
உலகுக்குயிர் கொடுத்த கருணையின் வித்து.
(யேசு பிறந்தார்)

கிறிஸ்து யேசு ஜெனித்த புண்ணிய நாளில் அவர்
கற்றுத்தந்த உண்மைகளை செயல்படுத்துவோம்.
நானெனும் அகங்காரம் மண்ணிலிடுவோம் எதுவும்
சிதைக்க முடியாத நித்திய இறைவனை அறிவோம்.
(யேசு பிறந்தார்)

ஆக்கம்: அ. மோசேஸ் தேவரத்தினம்
தும்பளை,
பருத்தித்துறை.

# பாலன் இயேசு பாரினில் வந்துதித்தார்

I வானவர் வாழ்த்தியது !
வானவர் பரிவாரம், வட்டமிட்டுச் சூழ்ந்து நின்று,
வானகத் தந்தையின் வடிவுமிகு குமாரனை, வாயார வாழ்த்தினரே,
உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமை உண்டாகுக.
உலகினில் அவர் தயவு பெற்றவர்க்கு அமைதியுமாகுக.
[லூக்: 2 14]

II பால் நிலவு வேளையிலே, பாலன் யேசு வந்துதித்தார் !
பாவிகள் பாவம் போக்கப் பாரினில், பச்சைப்புல்லை பஞ்சு மெத்தை என
பச்சிளம் பசுக்கள், பார்க்கப், பத்தினியாம் பாமாதா,
பனி கொட்டும் பால்நிலவு வேளையிலே, பார் போற்றும் பாலகனை,
மாசில்லா மாடுகள், மாநிலத்தில், மந்தைகளாய்,
துயரம் ஏதும் இன்றி. துயர் கொள்ளா வாழ்ந்திடும்,
மாட்டுத் தொழுவத்திலே, மனிதனாக ஈன்றெடுத்தார்.

III பாராளும் பாலன் இயேசு, பச்சைப் புல் நடுவினிலே.
பட்டுத்துணி போர்த்தி, பசுக்களின் தொழுவமதில். படுத்துறங்கினனென்று
வால் வெள்ளி முன் செல்ல வானவன் கூறினனே.

VI இரவெல்லாம் காவல்காக்கும், இன்முக இடையர்கள்,
இன்னல் பல கண்டு இரவெல்லாம் காவல் காக்கும்,
இன்முக இடையர்கள், இன்பம் பெறவென்று,
ஈசன் மகன் இயேசு, இப்புவியில் வந்துதித்தார்.

V மூவுலக அரசர்கள். முத்தி செய்தனரே !
மூவுலகு அரசாளும், மூவேந்தர், முப்பொருள், முன் வைத்து.
மூன் அறிவித்தபடி, முன்வந்து, முத்தி செய்தனரே !


மறை ஆசிரியை
சலமோன் சகாயமலர்
நெடுந்தீவு குருநகர்,

# பாவிகளை மீட்க தன்னுயிரை ஈந்த இறைமகன் இயேசு


நத்தார் பெருநாளை கொண்டாடும் அனைத்து உள்ளங்களும் சமாதானம் என்ற வார்த்தைக்காக ஏங்கி நிற்கின்றன. இயேசுவின் பிறப்பின் மூலம் சமாதானத்தைப் பெறத் துடிக்கின்றன.

ஏழ்மையின் ரூபமாய் தாழ்மைக் கோலமாய் மாட்டுக் கொட்டிலிலே அவதரித்த இறைமகன் இயேசுவின் பிறந்த நாளினை மகிழ்ச்சியுடன் கொண்டாடுகிறோம். இயேசு பிறந்து உலகசமாதானத்திற்காக பாடுபட்டார். ஆனால் இன்று எத்தனை நாடுகள் அமைதி இழந்து சமாதானமின்றிக் காணப்படுகின்றன. இன்று நாட்டுக்கு நாடு, வீட்டுக்கு வீடு, இனத்துக்குஇனம் பகை, குடும்பங்களில் சச்சரவு, அன்று குழந்தை இயேசு போதித்த சமாதானம் எங்கே

பாவிகளை மீட்க வந்து தன்னுயிரை ஈய்ந்த இறைமகன் அவமானத்தின் சின்னமாகவிருந்த சிலுவையை அன்பின் சின்னமாக மாற்றியவர். இவ்வன்பு இயேசுவின் வார்த்தைகள், போதனைகள் எவ்வளவு கருத்தாழமிக்கது. அவரது வார்த்தையின்படி நடக்காது பிறந்தநாளை மட்டும் கொண்டாடுவது போதாது, பொருந்தாது. இன்றைய நன்நாளில் இறைமகனின் வார்த்தையின்படி நடக்க உறுதி பூணுவோம். நடப்போம், எங்கும் சமாதானம் நிலவ நாம் பாடுபடுவோம். இதுவே இந்நன்னாளில் நாம் இயேசுவுக்கு செய்யும் நன்றிக்கடன், இறைவனுக்கென்றே வாழ்வோம். அவருக்காகவே சாட்சியம் பகர்வோம்



அ மோசேஸ் தேவரத்தினம்.
தும்பளை.



# "தூங்காதே தம்பி தூங்காதே"

இலட்சியத்தில் இடராது, உறுதியான உள்ளத்தோடு தான்பெற்ற அழைத்தலுக் கேற்ப செயலாற்றுவதே புனிதமாம். இறைவனில் திருமுழுக்கு வழியாக சங்கமித்த ஒவ்வொருவனும் உலகத்தோடு ஒட்ட ஒழுக வாழும்போது. அங்கு எதிர்ப்படும் சோதனைகளைக் கண்டு தூங்கி விடலாகாது.

உலகம், சரீரம், பசாசு என்னும் முச்சக்திகளுக்கு எதிராக எதிர்நீச்சல் போடவேண்டும். எப்படியும் வாழலாம் என்ற மனப்பாங்கை கைவிட்டு இப்படித்தான் வாழவேண்டும் என்ற நேர்நோக்கோடு எம் வாழ்வைப் புனரமைக்க வேண்டும். பாரதி அன்று 'அச்சமில்லை' அச்சமில்லை. உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை, அச்சமில்லை' எனப் பாடித் துணிச்சலை மனிதரிடையே புகுத்தியுள்ளான் அல்லவா? அந்தத் துணிவுடன் சோதனைகள். கவலைகள், கஷ்டங்களில் மனந்தளராமல் இருப்பதே மனித மாண்பு.

பூ காய் போன்றவை இல்லாமல் கனியில்லை அவ்வாறே சோதனைகள் துன்பங்கள் இல்லாமல் மனிதன் இல்லை மனுவுருக் கொண்ட காரணத்தால் நம் தெய்வீக இரட்சகர் தன் வாழ்வில் சோதனைகளை எதிர்கொண்டதிலிருந்து இவ்வுண்மை புலனாகிறது. எனவே நாம் இன்னும் எத்தனையோ மடங்கு சோதனைகளை எதிர்கொள்ள விழிப்போடு இருக்க வேண்டும். வாழ்வின் சிலுவைகளைச் சுமந்து கிறிஸ்துவைப் பின்பற்றலே சிறந்ததாகும்.

ஆகவே மனித, பாவச்சுமைகள், துன்பங்கள் நிறைந்த கரடு முரடான பாதையில் களிப்போடு நடந்துசெல்ல, தூங்கி விடாதே! விழித்தெழு! வளமான வாழ்வுக்காக பசுமையான எண்ணங்களுடன், என்றுமே விழித்திரு!

'தூங்காதே தம்பி தூங்காதே'

மே. யஸ்ரின் சௌகான்
சில்லாலை—பண்டத்தரிப்பு

---




அ. ம. தி. குருமடம்
கொழும்புத்துறை,
25-12-88

## உன்னையே தானமிடு

உள்ளதைச் சொல்லி
உண்மையாய் வாழு

உண்மையைப் பேசி
உயர்ந்திட யோசி

கள்ளமில் வார்த்தையைக்
கனிவுடன் கேளு

நல்லதைச் செய்து
நன்மையைத் தேடு

உள்ளொன்று இருக்க
உதட்டினில் இன்னொன்று?

உண்மைக்கு விலையாக
உன்னையே தானமிடு

வாய்மையே வளம்பெற
தூய்மையாய் வாழ்ந்திடு

வார்த்தையில் வாய்மையின்
வாயிலை வைத்திடு

உறவினில் பொய்மையை
உறுதியாய் விரட்டிடு.

உண்மையாம் இறையோனை
உறுதியாய்ப் பற்றிடு.

அன்பு-நெஞ்சன் வி. பி.

---

# அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாள்...

அழகை ரசிக்க
அனைவருக்கும் உரிமையுண்டு—ஆனால்
அதை அடைய
ஆர்வம் கொள்வது தவறு
அழகைக் கண்டு
அறிவை அழிக்காதே
அறிவெனும் அலையை
அலைபாய விட்டு
அன்பெனும் அழியாத
சொத்தைத் தேடு இளைஞனே.
நீரிற் குமிழியடா—தம்பி
இந்த இளமையில்
இறைவன் தந்த மேனி வனப்பு—ஆனாலும்
அழகு என்பது பாவமும் அல்ல
மின்னுவதெல்லாம் பொன்னும் அல்ல
சிப்பிக்குள் தானே முத்து
சிறுமையைக் கண்டு வெறுமையென
எண்ணுதே எண்ணிய எண்ணம்
எல்லாம் உண்மையாகாதே
கங்கா யமுனா நதியும் வற்றி விடலாம்—ஏன்
கண்ணீர் நதி கூட வற்றிவிடலாம்.
அன்பெனும் வற்ரு ஜீவ நதி என்றுமே வற்ருது
அன்பை அணைகட்டுவர் உள்ளத்தில்—பின் சமயத்தில்
அணைக்கட்டு உடைப்பெடுத்து உவர்ப்பு நீராய்
கண்களெனும் வாய்க்காலின் வழி
காவியம் படைத்து விடும் அன்பு

பலாலி, கென்றி குயின்

---

# விலங்கு-மனிதன் தெய்வம்

மாலையோடு கூடிய நாரும் மணம் வீசுவது போல மனுத்தன்மையோடு கூடிய மனிதனும் தனது மாண்பால் மணம் வீசவேண்டும். மாண்பினை இழந்தவன் மனிதனல்ல, அதேவேளை இன்னொருவனின் மாண்பினைப் பறிப்பவனும் மனிதனல்ல, அவனுக்குரியதை அவனுக்குக் கொடுத்து வாழ்பவனே உண்மையான மனிதமுடைய மனிதன். ஆம் மனிதனாகப் படைக்கப்பட்ட ஒவ்வொருவனும் மனிதனே. அவன் மனிதத் தன்மையிலிருந்து இறங்கி வரும்போது மிருகமாகின்றான்.

மனிதத்தன்மையை விட ஒருபடி உயரும்போது தெய்வமாகிறான். இந்த வகையில் நான் எத்தகையவன்? எந்நிலையில் உள்ளவன் என்பதை சிந்தித்து முதலில் மனிதத் தன்மை உடையனாக (உடையவளாக) வாழ்வேனாக!

D. E. ரட்ணராஜ்
இளவாலை.

---

## நற்சிந்தனைக்கு ...

தன்னைத்தான் நன்றாய் அறிகிறவன் மனிதருடைய புகழ்ச்சிகளால் சந்தோஷமடைவதில்லை.

அறிவிலி, தன் இரட்சணியத்திற்கு உதவியான காரியங்களைவிட மற்றக் காரியங்களில், அதிக கவனம் செலுத்துகிறான்.

மனஸ்தாபம் இன்னதென்று அறிகிறதைவிட, மனஸ்தாபப்பட அதிகமாய் ஆசிக்கவேண்டும்.

லூசியா சூசைப்பிள்ளை.
யாழ்ப்பாணம்.

---

# நத்தார்ப் பொன்னாளே நீ வாழி!

— வாலைநாயகன் —

இசைமீட்டி விண்ணில் இறைதூதர் பாடுகிறார்
அசையாது நின்றே ஆர்வமொடு கேட்கின்றேன்.

'நல்லவுளத்தோர்க்கு நானிலத்தில் நீடமைதி
வல்லபிதா ஆளும் விண்ணெங்கும் வீங்குபுகழ்''

சாகாவரங் கொண்ட தத்துவத்தினுட்பொருளை
ஆகா! செவிவழியாய் அகங்குளிரக் கேட்கின்றேன்.

காலத்தை வென்ற கருணை யிரட்சகனை
ஞாலத்துக் கீந்த நத்தாரே நீ வாழி!

புவியின் நடுவமைந்த புகழ்ப் பெத்தலேம் நகரில்
செவியின் நற்செய்தித் தேன்பிறந்த நாள்வாழி!

விண்ணாளுந் தந்தை விருப்பைப் புவியிலருட்
கண்ணாளன் யேசு காட்டவந்த நாள்வாழி!

ஆதம் பெண்ணாசை அதனால் மனுக்குலத்தைச்
சேதஞ்செய் பாவங்கள் செத்தழியும் நாள்வாழி

மக்கட் குலமிதிலே மண்டிவிட்ட மாயவிருள்
சுக்குநூறாய்ச் சிதையச் சுடரெழுந்த நாள்வாழி!

கன்னிமரி வயிற்றிற் கருவாயமைந்த அருள்
மின்னுமொளித் திரளிம் மண்ணுதித்த நாள்வாழி!

ஆசைக்காம் பெண்மை அன்றழிவைத் தந்ததனால்
பூசைக்காம் பெண்மை பூத்தமகன் நாள்வாழி

உடற் றீயுணர்வுகளால் உருவான தீமையெலாம்
கெடத் தூயாவியிலாம் கன்னிமகன் நாள்வாழி.

கன்னிமரி, சூசை, கரவில்லிடையர் நடுப்
புண்ணியங்கள் சிந்தும் பூமலர்ந்த நாள்வாழி!

மந்த மதியாளர் மாளிகையிற் காத்திருக்கக்
கந்தைத் துணிகளுக்குள் கருணை துயில் நாள்வாழி!

சிந்தை தெளியாதார் சீர்வரிசையோடிருக்க
மந்தையிடையர்நடு மன்னனெழும் நாள்வாழி!

வன்முறைகள் சேரா வழியிற்றனைப் பலிசெய்
தன் முறையில் மீட்பைத் தந்தவனின் நாள்வாழி

துப்பாக்கிக்குண்டாற் சொரிகுருதியாலேனும்
தப்பாக்கி மீட்பைத் தாராதான் நாள்வாழி!

பந்தமறுத் தெம்மிற் பாவங்கள் போக்குமருட்
சுந்தரனாம் யேசுச் சோதியெழும் நாள்வாழி!

கொடுமைக் குண்டுகளாற் குற்றுயிராம் மானிடரின்
அடிமைத் தளையறுக்கும் அன்பாளன் நாள்வாழி!

மூவாசை நெஞ்சில் மூளாமற் காக்கினன்றோ
தேவாரத் தூதர் செப்பமைதி கைகூடும்

மும்மலங்களுள்வாழ முகமூடிவேடமிடும்
நம்மலங்காரம் நடுவே நத்தார்ப் பொன்னாள் வருமோ?
அருளாளன் அன்பில் அரசாளும் எம்முளத்திற்
பொருளோடு நத்தார்ப் பொன்னாளே நீ வாழி!

---

கிறிஸ்மஸ் கவிமாலை:

## பாலனிடம் வேண்டிடுவோம்

பாவக்கடலில் வீழ்ந்து உழலும் பண்பற்ற மக்கள் — குலப்
பாவத்தைக்களைந்து பண்பாளராக்கி இரட்சிக்க
பாலகனாய்ப் பூவுலகில் மாமரி மடிதனிலே — யேசு
மார்கழியில் வந்துதித்தார் மாட்டடை குடிலினிலே.

தன் அன்பையும் ஆசியையும் எமக்கும் — சர்வ
தரணிக்கும் நல் மனத்தோர் யாவர்க்கும்
தந்த சமாதானம் என்றும் நிலைத்திடவே — மீண்டும்
இன்று பாலகனாய் எம்மிடையே வருகின்றார்

மாரி மழை பொழிந்து மக்கள் குலம் தழைத்து — தம்
மானம் பேணும் நல் சுதந்திர மாய்
மாந்தரிடை எம் மொழி எம் மக்கள் எம்
ஈழ வழ நாடு என்ற உணர்வு பெற
யேசு பாலனிடம் வேண்டிடுவோம்

தொகுப்பு:-
எ. விமல் றாஜன்
பலாலி.

# அருள் வாக்கு அறிவோம்

"அருள் வாக்கு அறிவோம்" வாசக நேயர்களுக்கு எமது "திருமறைப்பணி நிலையத்தின்" சார்பில் உள்ளம் கனிந்த கிறிஸ்தோதய வாழ்த்துக்கள் !!!

கடந்த இரண்டு வருடங்களாக எமது நிலயம் "காவலன்" வாசக நேயராகிய உங்களுக்கு திருநூலின் ஆழ்ந்த கருத்துக்களை தெளிவுற விளக்கி வந்தோம்.

குறிப்பாக கடந்த இரண்டு வருடங்களிலே திருநூலின் உட்பொருளை உங்களோடு பகிர்ந்து கொண்டவர்கள் அருள் திருக்கள் றூபன் மரியாபபிள்ளை, இரா சூசைநாதன் போன்றவர்களையும், அருள்சகோதரர்கள் இயூயின் பிரான்சிஸ், டேவிற் மனுவற்பிள்ளை இவர்களோடு தொடர்ந்து விளக்கி வரும் முழுநேர மறை ஆசிரியர் கி. சா. பங்கிராஸ் அவர்களையும் நன்றி உணர்வோடு வாழ்த்துகின்றோம். இவர்களின் சேவை தொடர்ந்து எமது பகுதியில் மிளிரவேண்டுமென வேண்டி நிற்கின்றோம்,

இன்னும் திருநூல் என்பது முழு வரலாறு மட்டுமல்ல பாரம்பரியத்துடன் இணைந்த ஒன்று என்பதை நாம் என்றும் மறக்க முடியாது! அதன் பின்னணிகளைத் தகுந்த ஆதாரங்களுடனும், ஆராய்ச்சிக் கண்ணோட்டத்துடனும் ஒப்பிட்டு 50 வாரங்களுக்கு மேலாக உங்களுடன் பகிர்ந்து கொண்ட எமது நண்பனும், முழுநேர மறை ஆசிரியராகப் பணியாற்றும் இ. ம. ஜெயசீலன் அவர்களையும அவரின் தியாகசீலத்தையும் மனமாரப் பாராட்டி நிற்கின்றோம்.

மேலும் "பைபிள் கதைகள்" "கேள்வி பதில்கள்" "பழமொழி—புதுமொழி" மூலமும் எளிதில் இலகுவில் அனைவரும் புரியக்கூடிய முறையில் திருநூலைப் பல கோணங்களில் உங்களுக்கு விளக்கி வருகிறோம.

"வார்த்தை மனுவுருவானர். நம்மோடு குடிகொண்டார்" என்ற தத்துவத்தின் உண்மைப் பொருளை நாம் உணர்ந்து என்றும் யேசு அவரின் "வார்த்தை" எம்மோடு தங்கி வாழவும், அவரின் வார்த்தையிலே திடன் கொள்ளவும், பிறக்கப் போகும் புதுவருடத்தில் உங்களுக்கு அறைகூவல் விடுக்கின்றோம்.

திருநூல் என்பது ஒரு தங்கச்சுரங்கம், அதை வெட்ட வெட்டப் புதிய அரிய பொக்கிஷங்கள் வெளிவரும். எமது ஆக்கங்களுக்கு உங்களது பூரண ஒத்துழைப்பும் ஆதரவும் தேவை.

பிறக்கும் புத்தாண்டு எம் அனைவருக்கும் ஒளிமயமானதாக அமைய சத்திய வார்த்தையில் நித்தமும் நாம் வாழ உங்கள் ஒத்துழைப்பு, ஆதரவு எமக்கென்றும் தேவை. புத்தாண்டு வாழ்த்துகளுடன் விடைபெறும்,

எஸ். ஏ. நாதர்.

## அறிந்து கொள்ளுங்கள் 61

## பேழை

"சேத்தீப் பரங்களால் ஒரு பெட்டகத்தைச் செய்யுங்கள்" இது இறைவன் இஸ்ராயேல் மக்களுக்கும் மோயீசனுக்கும் கூறிய கட்டளை. அதியாகமத்திலும் இறைவன் நோவாவிடம் ஒரு பெட்டகம் செய்யுப்படி கூறுகின்றார் (ஆதி 6/14 - 16). இப்பெட்டகம் வெள்ளப்பெருக்கிலிருந்து நோவா குடும்பத்தைக் காப்பாற்றிய கப்பல். நாம் பார்க்கப்போவது இஸ்ராயேல் மக்களின் பாலைநில வாழ்வில் இறைவனின் சட்டங்களைப் பாதுகாக்கச் செய்யப்பட்ட பேழை. யாத்திரை ஆகமம் 25:10-22ல் பேழை அதாவது பெட்டகம் எப்படிச் செய்யப்பட வேண்டும் என்று கூறப்படுகின்றது. சேத்தீம் மரத்தால் செய்யப்பட்டு உள்ளும் புறமும் பொன் தகட்டால் மூடப்பட்டது. தூக்கிச் செல்ல வசதியாக வளையங்கள் போடப்பட்டு கம்புகள் செருகப்பட்டிருந்தன. பேழையின்மேல் இரக்கத்தின் அரியணையும் அதன் இருபுறமும் செருபீம்களும் வைக்கப்பட்டிருந்தன. பாலைவனப் பயணத்தில் மக்களுடன் இறைவன் நெருங்கியவிதமாய் பிரசன்னமாயிருக்கவும் கற்பலகைகளைப் பாதுகாக்கவும் பேழை செய்யப்பட்டது.

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்)

## பழமொழி ஆகமமும் முதுமொழியும்.

உள் ஒன்று வைத்து புறம் ஒன்று பேசும் உறவு கலவாமை வேண்டும் என்று எங்களூர் கவிஞன் ஒருவன் பாடியிருக்கிறான். அநேகமாக எமது வாயிலிருந்து, வருகின்ற வார்த்தைகள் சுயலாபத்திற்காகவோ, சொந்த தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவோ ஒருவனிடம் இல்லாத ஒன்றை இருப்பதாகச் சொல்லி அவரைப் பாராட்டி எங்கள் காரியத்தை சாதத்துக் கொள்ளுகிறோம். உண்மை தானே.

10 / 11ல் "நீதிமானின் வாய் வாழ்வின் ஊற்று. அக்கிரமிகளின் வாயில் அநீதி மறைந்திருக்கிறது"

இப்படி இடித்துரைத்து போலி முகமூடியை கிழித்தெறிய விழையும் திருநூல் ஆசிரியரோடு நம் தமிழ் ஆசிரியரும் கலந்து கொள்ளுகிறார்.

எபபடியென்று தெரியுமா?

"கள்ள ஞானிக்கு கழுத்திலே செபமாலை" என்றும்- "கையிலே செபமாலை, கக்கதிலே கன்னக்கோல்"

பெரியவர்கள் தவறு செய்தால் அது வெளியே வராது. வந்தாலும் சமுதாயம் அதை சகித்துக் கொள்ளும்.

ஆனால் அதே பிழையை கீழ் மட்டத்திலுள்ளவர்கள் செய்து விட்டாலோ அவர்கள் அவமானப்படுத்தப்படுவது மட்டுமல்ல - தூக்கி வீசவும் செய்கிறார்கள்,

பொருத்தமாக நமது தமிழ் முதுமொழியாளர் -

"மாமியார் உடைத்தால் மண் சட்டி - மருமகள் உடைத்தால் அதுபொன்சட்டி" என்பதோடு

"ஆத்திரம் அறிவுக்கு சத்துரு" என்பர்

விடுவாரா விவிலிய ஆசிரியர் 10 / 12ல் உறைப்பாக விறைப்பாக உரைக்கின்றார் இப்படி -

"பகை சச்சரவுகளை எழுப்புகிறது. நட்போ எல்லாப் பிழைகளையும் மூடுகின்றது"

இன்னொரு முதுமொழியையும், உங்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றேன்.

இன்று எங்கள் நாட்டிலே பிரச்சனைகள் மத்தியிலே வாழுகின்ற மக்கள் தங்களுக்குத் தாங்களே கூறிக் கொள்ளும் முதுமொழி-

"அரசன் அன்றுகொல்லும்- தெய்வம் நின்று கொல்லும் என்பதே,

ஆனால் இன்றைய நாட்களைப் பொறுத்தமட்டில் தெய்வம் உடனுக்குடன் தண்டித்து வருவதை நீங்கள் கண் கூடாக பார்த்து வருகிறீர்கள் உண்மை தானே?

தெய்வ பயம் நாட்களை நீடிக்கச் செய்யும்! அக்கிரமிகளுக்கு ஆண்டுகளும் குறைக்கப் படும்! (ப. மொ. 10/27)

எஸ். ஏ. நாதர்.

# காவலன் கண்மணிகள்

| | |
|---|---|
| ஒளி: 2<br>சுடர்: 36 | எம் விழிகளின் ஒளி யேசு<br>எம் வாழ்வின் வழி யேசு |

## அன்பு விழியின் அன்புக்குரல்

அன்புள்ள கண்மணிகாள் !

மார்கழி பிறந்து விட்ட இவ்வேளையில் 'குழந்தை யேசு'வை உற்றுப் பார்க்க உங்களை அழைக்கிறேன். 'குழந்தை யேசுவின்' பொன்னொளி பொருந்திய அன்பு விழியை உங்கள் விழி சந்திக்கட்டும். அந்த அன்பு விழி கூறும் அன்பான வார்த்தைகளை அவதானமாகக் கேளுங்கள்.

என் பிறப்பு விழாவைக் கொண்டாடவிருக்கும் கண்மணிகாள் என் பிறப்பில் நீங்கள் மகிழ்ச்சிகொள்ளக் காரணம் என்ன ?

வீட்டில் சுவையான உணவு, உடுத்த பகட்டான ஆடை அணிகலன், அலங்காரப் பொருட்கள் இத்தனையும் கிடைக்கும் என்ற மகிழ்ச்சியா ? இன்று உங்களைச் சுற்றிப் பாருங்கள்.

உணவின்றிப் பட்டினியால் வாடும் குழந்தைகள் உங்கள் கண்களுக்குத் தெரிகிறார்களா? தெரிந்தால் அவர்களின் பட்டினியைப் போக்க உங்கள் சக்திக்கேற்ற வகையில் வழி தேடுங்கள்.

உடையின்றித் திரியும் குழந்தைகள் தெரிந்தால் அவர் குறைநீக்க வழி தேடுங்கள்.

ஆயுதப் போட்டா போட்டிக்குள் சிக்கித்தவிக்கும் குழந்தைகளின் ஓலத்தைச் சிரிப்பொலியாக மாற்ற என்ன செய்வீர்கள் ? உங்கள் சக்திக்கு இது உட்பட்டதல்ல என்றாலும் வீண் ஆட்டமும் பாட்டையும் தவிர்க்க முடியும் தானே ! ஏழ்மையில் நான் இன்பம் கண்டேன். எளிமையில் நான் மகிழ்வு கொண்டேன். தந்தையின் சித்தத்தில் நிறைவு கொண்டேன். நீங்களும் என்னைப் பார்க்கையில் தொடுகையில் இவற்றையும் உம் இதயத்தில் இருத்தி, இறை சித்தத்தில் நிறைவு கொண்டு வாழுங்கள். அப்பொழுது உங்கள் இதயத்தை நான் என் இருப்பிடமாக்குவேன்.

குழந்தை யேசுவின் பாசமுள்ள கண்மணிகாள் உங்கள் கிறிஸ்மஸ் எப்படி அமைய வேண்டும் என்பதை நினைக்கவே இதனைத் தந்தேன்

நன்றி.

அன்பு விழி

### இரட்சணியம்

இருவிழி மூடி இறைவனை
இதயத்தில்
இரந்திடும் இதயங்களே!......
இறைவனிடத்தில்—
தன் இதயத்தை
இழந்து நிற்பதே
இரட்சணியம்.

இறை, பிறர் அன்பாலே
இரட்சணியம்
அடைந்திடலாம்.
கடமையைக்
கருத்தாய் செய்து
கடவுளைக் கண்டிடலாம்
நாயகனை அடைந்திடவே,
நன்மைகள் புரிந்திடுவோம்.
இரட்சணியம் அடைந்திடவே,
இரக்க செயல் புரிந்திடுவோம்.
அயலானில் ஆண்டவனைக்
கண்டு
அன்புப்பணி புரிவதனால்,
இடைவிடாது இறையருள்
இரந்து
இரட்சணியம் அடைந்
திடலாம்.

செ. அன்புராஜ்
அ. எண்; 56.

### புன்னகை வேண்டும்

பொன்னகை வேண்டாம்
புண்படும் உள்ளத்தை
புத்தொளிர் பெறச்செய்ய
புன்னகை வேண்டும்
உன்னிலே!


அழுதிடும் நெஞ்சத்தை
ஆறுதல் படுத்திடவும்
கல்லான நெஞ்சத்தை
கனிவுறச் செய்வதற்கும்
புன்னகை வேண்டும்
உன்னிலே!

வாடிடும் உள்ளத்தை
வாழச் செய்வதற்கு
வசந்தமாய் நீயும்
வையகத்தில் வாழ்வதற்கு
புன்னகை வேண்டும்
உன்னிலே!

பகைவனுடன் நட்பாட
பாசத்தை வெளிக்காட்ட
கோபத்தை உள்ளடக்க
கோயிலாக நீ மாற
புன்னகை வேண்டும்
உன்னிலே!

D. E. ரட்ணராஜ்.
அ' எண். 65.

# கிறிஸ்மஸ் விழா சிந்தனைகள்



கிறிஸ்மஸ் ஒரு மகிழ்ச்சி விழா. ஏனெனில் அது ஆண்டவர் யேசுக்கிறிஸ்துவின் பிறப்பு நாள். இறைபராமரிப்பின் கொடுமுடியான நாள். நம் முன்னோர்காலாகாலமாகஏங்கி நின்ற நாள். நம் கவலைகள் ஒழிந்த நாள். நாம் அனைவரும் புது வாழ்வு பெற்ற நாள் அருள் வெளியை ஏந்திய நாள் இறைவன் மனிதரோடு பாவம் தவிர மற்றைய அனைத்திலும் பங்கெடுத்து உரிமை வழங்கிய நாள். இறைவனே எம்மை மீட்க மனுவுருவெடுத்துப் பிறந்த நன்னாள் இது. மீட்பு என்பது முழு விடுதலையைக் குறிக்கும். ஆனால் முழு விடுதலையை நாம் பெற்று வாழ்கின்றோமா? பிறர் முழு உரிமையுடனும் சுதந்திரத்துடனும் கடவுளின் பிள்ளைகளாக வாழ நாம் எப்படிப்பட்ட பணி புரிகின்றோம்?

கிறிஸ்மஸ் விழா என்றால் ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய இல்லத்திலும் கோவில்களிலும் இயேசு பாலகன் காட்சி கொடுக்கும் குடிலின்முன் பக்தர்கள் கையில் மாலையுடன் வரிவரியாக அணிவகுத்து நிற்பதைக் காணமுடியும். ஆனால் அக்கோவில்களின் வாயிலில் ஏழைகள், நோயாளிகள், கைவிடப்பட்டோர் பலரையும் காணமுடிகின்றது. அவர்கள் அந்தக் கோலத்துடன் அந்த மீட்பரைக் காணமுடியாத அவலநிலை. எனவே பாலன் யேசுவைப் போன்று அவர்களுக்கு தலைசாய்க்கவும் முடியாத நிலை. எங்கு சென்றாலும் இடமில்லை என்ற பதில்தான்.

அன்புக்கு விழா எடுப்பது தான் கிறிஸ்மஸ். வாழ்த்துக்களைப் பரிமாறிக்கொள்வது, இதயத்தில் இருப்பவற்றையும் உள்ளத்தில் ஊற்றெடுக்கும் அன்பினையும் பிறருக்குப் பகிர்ந்து அளிப்பதே கிறிஸ்மஸ்.

நம்ஆதிப்பெற்றோரின் தவறினால் பாவத்திற்கு உள்ளான நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் பிறப்பின்மூலம் மீட்பு அடைவோம் என்று பல இறைவாக்கினர்களின் இறைவாக்குகள் நிறைவேறியது. இந்த வகையில் உரைக்கப்பட்ட இறைவாக்குகள் நிறைவேறும் பொருட்டு இறைமகன் 2000 ஆண்டுகளுக்குமுன் மனிதர்களிடையே மனுவுருவெடுத்தார். மனுவுரு எடுத்தது மட்டுமல்ல, பாவம் தவிர்ந்த மற்றைய எல்லாவற்றிலும் மனிதரோடு மனிதராக வாழ்ந்து வந்தார்.

ஒவ்வொரு வருடமும் மார்கழி மாதம் 25ம் திகதியை உலகத் திருச்சபையானது மிகவும் சிறப்பான முறையில் கொண்டாடுகின்றது என்றால் அது வேறு எதற்கும் அல்ல எமக்கு அதாவது ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் மீட்பின் பாதையை மீட்பின் ஒளியினைக் காட்டிய ஒரே ஒரு செயலுக்காகத்தான்.

---

பொது நிலையினரினதும் குடும்பத்தினதுமான ஆணைக்குழு நடாத்தும்

## சிறப்புப் போட்டி
## "குட்டிக்கதைகள்"

எழுத்தாளர்களே! உங்கள் திறமைக்கு களம் - இதோ! உங்கள் படைப்பில் நற்செய்திகள் பரப்பும் கருவாக சிறுவர் சஞ்சிகைக்கு உகந்ததான "குட்டிக்கதைகள்" எழுதி அனுப்பி பரிசில்களைத் தட்டிக்கொள்ளுங்கள்.

சிறப்பு பரிசில்களைப் பெற நிபந்தனைகள் இதோ:

கரு:— நற்செய்தி சிந்தனைகள்

(1) ஒரு பக்க புல்ஸ்காப் தாளில் அடங்கிய குட்டிக்கதை.
(2) ஒருவர் எத்தனையும் அனுப்பலாம்.
(3) நடுவர்கள் தீர்ப்பே இறுதியானது.
(4) போட்டி இறுதி நாள் — 15-02-89

அனுப்பவேண்டிய முகவரி:- "குட்டிக்கதைகள்"

யா. ம.வ. தலைவர்
பொது நிலையினர் ஆணைக்குழு
புனித மரியன்னை பேராலயம்
யாழ்ப்பாணம்

---

## பொதுநிலையினரினதும் குடும்பத்தினதுமான ஆணைக்குழு நடாத்திய ஒளிவிழா நாடகப் போட்டி முடிவுகள்

பொது நிலையினரினதும் குடும்பத்தினதுமான ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்ட ஒளிவிழா நாடகப் போட்டி 9-12-88 வெள்ளிக்கிழமை மறைக் கல்வி நடு நிலையமண்டபத்தில் நடைபெற்றது.

பல பாகங்களிலும் இருந்து வந்த கலைஞர்களின் உற்சாகத்தின் திறமையில் தெரிவான நாடகங்கள்—

1-வது நாடகம் — "விழிப்பு" — மிருசுவில் பங்கு.
2-வது நாடகம் — "வாசலுக்கு வந்தவர்" புனித யுவானியார் பங்கு, யாழ்ப்பாணம்.
3-வது நாடகம் — "ஒரு ஆன்மா அழுகின்றது" யாழ். பேராலயம்.

சிறந்த நடிகர் — கு. வபிலியதாசன்(சிப்பாய்)மிருசுவில் பங்கு
சிறந்த கரு:- "நீலக்கண்ணீர்" நெடுந்தீவுப் பங்கு.
அரங்கமைப்பு:- யாழ். பேராலயம்.

கலந்துகொண்டு சிறப்பித்த பங்குக் குழுக்களுக்கும் பாராட்டிதழ்கள் வழங்கப்பட்டன.

### ஒளிவிழா கவிதைப் போட்டி முடிவுகள்

1வது பரிசுக் கவிதை — ஜூட் டொளிற்று பிரான்சிஸ் இளவாலைப் பங்கு
2வது ,, ,, — மேரி மெக்டலின் யா/நெடுந்தீவு, மத்தி. றோ. க பெண்கள் பாடசாலை நெடுந்தீவு
3வது ,, ,, — ஞா. அரியமலர் ஆசிரியை, மிருசுவில்

### சுவரொட்டி போட்டி முடிவுகள்

1வது சென்.அன்ரனீஸ் வாசிகசாலை, 11ம் வட்டாரம், நெடுந்தீவு
2வது செல்வி எம். சியிலாறேஸ், யாழ். தி. கு. க. ம. ஆங்கில பாடசாலை.
3வது செல்வி சுயாந்தினி மோகனதாஸ் யா/திருக்குடும்ப கன்னியர் மடம் ஆங்கில பாடசாலை யாழ்ப்பாணம்

இவற்றிற்கான பரிசில்களை கடிதமூலம் அறிவிக்கும் திகதியில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

---

முதலாம் பரிசுபெற்ற ஒளிவிழா வாழ்த்துமடல்

## இயேசுவைக் காண்போம்

அன்புப்பிணைப்பால் அகிலத்தை அரவணைத்து
தன்னுயிர் நீத்திந்த தரணியை வாழ்வித்த
நிறைவான ஞானஒளி நிலவுகின்ற வாழ்வின் ஒளி
இறைமகன் கிறிஸ்து இங்கு வந்த இந்நாளில்
"ஏழைகள் அநாதைகள் ஏதுமில்லா அகதிகள்
இவர்கள் உருவினிலே இறைவனை நீ காண்" என்ற
ஏசுபிரான் பொன்மொழியை இதயத்தில் கொண்டிங்கு
வாழ்விழந்து நிர்க்கதியாய் வாடிநிற்கும் அயலவர்க்கு
வாழ்வளிப்போம் வழிசமைப்போம் வாட்டத்தை நீக்கி எம்
வாழ்வில் பங்காளிகளாய் வாழவைப்போம் அதன் மூலம்
வையத்தில் ஏசுவைநாம் எந்நாளும் சந்திப்போம்
இந்நாளே நன்னாளாய் எழுந்திடுவீர் இறைபணிக்கு!

இப்படிக்கு
ஜூட் டொளிற்று — பிரான்சிஸ், இளவாலை

★ ★ ★

இரண்டாவது பரிசுபெற்ற ஒளிவிழா வாழ்த்துமடல்

## உள்ளவை பகிர்வோம்

'அன்பில் உதித்த அழகிய குழந்தை
அருளொளி வீசும் இறைமகன் இயேசு
திருவுளங் கண்டு தீமைகள் விலக
தன்னலம் மறந்து பிறர்நலம் போற்றி
சாதிசமய இனமொழி வாதம் ஏதுமின்றி
சமரச சன்மார்க்க நன் சகோதரராக
இல்லாதோருடன் உள்ளவை பகிர்ந்து
எல்லோரும் இனிதே இன்புற்றிருக்க
உண்மை நீதிவழி உலகம் உய்ய
அண்ணல் அறவழி நின்று நீவிர் வாழ
நாளிது மலரும் நத்தார் தினமதில்
நன்மைகள் பெருக நலமுடன் வாழிய'

தொகுத்தவர் - ம. மேரி மெக்டலின்
யா/ நெடுந்தீவு மத்தி றோ. க.
பெண்கள் பாடசாலை, நெடுந்தீவு.

★ ★ ★

மூன்றாவது பரிசு பெற்ற ஒளிவிழா வாழ்த்துமடல்

## காரிருளைக் கலைத்திடுவோம்

புல்லணையில் பூத்திருக்கும் பூங்குழந்தைப் பாலனுக்கு
அல்லல்பல சூழ்ந்தாலும், அமைதியுண்டு, அதையுணர்வேன்.

சிந்தை குழம்பிநின்று, சிரழியும், வேளைகளில்,
தந்தை சூசையரின், தனித்துயரை நினைந்திடலாம்.

தாழ்மை தரித்திரத்தில், தவப்பாலன், தாற்பரியம்,
ஏழ்மை இழிவுகளில், எப்போதும் உணர்வுவரும்.

ஆசை ஆணவங்கள், அறியாத் தனங்களிலே!
சூசை மரியாளின், சூழ்துயரே வழிகாட்டும்.

ஆறுதல் ஏதுமின்றி, அந்தரிக்கும் வேளைகளில்,
தேறுதல் கூறிநின்ற, திருத்தூதன் துணையறியும்.

நல்லிதய, இடையர்களே நற்காட்சி கண்டெழுந்தார்!
கல்லிதயக் காரிருளைக் கலைத்தென்றும் களிப்படைவோம்.

ஞா. அரியமலர்
ஆசிரியை, மிருசுவில்

---

பல கிறிஸ்தவநாடுகள் இந்த விடுதலைப் பாதையைக் காட்டிய விடுதலை வீரனின் நினைவு நாளைக் கொண்டாடும் பொருட்டு மூன்று நான்கு மாதங்களிற்கு முன்னதாகவே விடுதலை விடப்பட்டு அதற்கான ஆயத்தங்களை மேற்கொள்வார்கள்.

சில நாடுகளில் இந்த நாட்களில் சிறைக்கைதிகள்கூட விடுதலை செய்யப்படுகின்றார்கள். சிலருடைய சிறைவாச கால அவகாசம் குறைக்கப்படுகின்றது.

இந்த இறைமகனின் மனித அவதாரம்பெற்ற நிகழ்ச்சியை நினைவுகூர மக்களை ஆயத்தப்படுத்த இறைவனால் இறைமகனின் முன்னோடியாக புனித ஸ்நாபக அருளப்பர் அனுப்பப்பட்டார். இவர் இறைவனின் மகனை உலகின் ஒளி என்று குறிப்பிட்டார்.

கிறிஸ்மஸ் என்று நாம் சாதாரணமாக இறைவனின் பிறப்பைக் கூறுகின்றோம். அது உண்மை சத்தியம். ஆனால் நம் அன்பு எங்கு இருக்கின்றதோ அங்கெல்லாம்கிறிஸ்மஸ் தானே? எப்போதெல்லாம் உண்மையான அன்பு உள்ளத்திலிருந்து பிறக்கின்றதோ அப்போதெல்லாம் கிறிஸ்மஸ்தானே! எங்கெல்லாம் அன்புறவு பெருகுகின்றதோ, ஊற்றெடுக்கின்றதோ அங்கெல்லாம் கிறிஸ்மஸ்தானே!

பி. அலன், அருள், ஆச்சிரமம்

## அர்த்தமுடன் கொண்டாடுவோம்

புத்தாண்டு விழாவினை மகிழ்ச்சி கலவாத நிலைமையில் நாம் இன்று கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். இதன் உண்மை அர்த்தம் உங்களுக்கு நன்றாகப் புரியும் என்று நான் நினைக்கின்றேன். இயக்கங்கள் மத்தியிலே ஒருமைப்பாடும், இனங்கள் மத்தியிலே ஐக்கியமும் ஏற்படாவிட்டால் எங்கள் புதுவருடம் அர்த்தமாகி விடுமா?


சிந்தித்துச் செயலாற்ற வேண்டி இப் புதுவருட நன்னாளிலே உங்களனைவரையும், இருகரம் கூப்பி அழைக்கின்றோம்

கிறிஸ்துவின் அவதாரம் ஜாதி, சமய, பேதங்களுக்கு அப்பாற்பட்டதொன்று என்ற உண்மையை நீங்கள் அனைவரும் உணர்ந்து கொள்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

நாம் எங்கள் சிறிய நாட்டில் பல்வேறுபட்ட ஜாதி மத குழப்பங்களினால், அங்கலாய்க்கின்றோம். பெரியவன் - சிறியவன் என்ற பாகுபாட்டிலே ஊன்றித் திளைத்தவர்களாக ஒருவரோடு ஒருவர் முட்டி மோதிக்கொள்கின்றோம்.

இத்தகைய நிலையிலே கிறிஸ்து எம்மோடே வாழ்வது தகுதியா? அர்த்தமா? என்பதை உங்கள் செவிகளுக்கு வினா தொடுத்து நிற்கின்றேன்.

புத்தாண்டு நம் அனைவருக்கும், விடுதலை பெறவேண்டி



வருமாக நாம் சிந்திக்கத் தொடங்கினால் ...

A) நாம் அனைவரும் ஜாதி மத வேறுபாடுகளைக் களைய வேண்டும்.

B) ஒருவரை ஒருவர் ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் நம்மில் வளர வேண்டும்.

C) ஒடுக்கப்பட்ட நிலையிலே வாழுகின்ற நாம் உரிமைக்குரலெழுப்பத் துணிந்து செயற்பட வேண்டும்.

D) தாழ்த்தப்பட்டவர்கள்- உரிமைகள் மறுக்கப்பட்டவர்கள் அனைவருக்கும் சம நீதி கிடைக்கவேண்டும். ......

என்ற குறிக்கோளை நமது வாழ்வில் ஏற்றுச் செயற்பட்டால் கிறிஸ்து எம்மிடையே உதித்ததன் காரணம் என்னவென்று என்பதை நானும் நீங்களும், உணரக் கூடியதாக இருக்கும்.

அன்று பிறந்த கிறிஸ்து இன்றும் எமது உள்ளங்களிலே இல்லங்களிலே, பிறக்கவேண்டி ஜெபிப்போம் - சிந்திப்போம்- செயலாற்றுவோம். என்ற உண்மை என்றும் எங்கள் மனதிலே நீடித்து நிலைபெற வேண்டும் என்று மனதாரப் போற்றி உங்கள் அனைவருக்கும் "கிறிஸ்தோதய" வாழ்த்துக்களைக் கூறி உங்களைச் சிந்திக்கத் தூண்டும் உங்கள்.

சகோதரி
அ. டெய்சி.

## கிறிஸ்மஸ் செய்தி

மனிதனைப் புனிதனாக்க இறைவன் மனிதனானார். இறைவனின் இந்தத் திட்டத்தில் நமது பங்களிப்பை நாம் பூரணமாக அளிக்கின்றோமா என்றால் இல்லை என்றுதான் கொள்ள வேண்டும். நாம் ஒவ்வொருவரும் உத்தமதனத்தில் நாளுக்கு நாள் வளர்ந்து, நம்மைச் சார்ந்து வாழ்வோரையும், அந்நிலைக்குச் சிறிதளவேனும் இட்டுச்செல்ல முயலும்போது ஒரு நல்ல சூழல் உருவாகின்றது நல்ல சூழலினால் தோன்றும் நல்ல சமுதாயத்தில் அக்கிரமங்களுக்கு இடமே இருப்பதில்லை.

ஆனால் இன்று தான் தோன்றித்தனமான செயல்களும், அநியாய அழிப்புக்களும், அக்கிரமங்களும் நம்மிடையே மலிந்து மனித மாண்பு அழிக்கப்படும்நிலை உருவாகி இருக்கிறதென்றால் நாம் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வகையில் எமது கடமையில் தவறிவிட்டோம் என்றே கருத்தில் கொள்ளவேண்டும். மனிதரின் பாவஇருளை நீக்கவே கிறிஸ்து மேதினியில் மானிட உருவந்தாங்கிப் பிறந்தார்.

எனவே கிறிஸ்து பிறப்பு விழா நெருங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் நாம் எமது உள்ளங்களில் கிறிஸ்து பிறக்க இடமளிப்போம். நம்மில் வளர்ந்திருக்கும் எரிச்சல், பொறாமை, பகை, பழியுணர்வு, உலோபித்தனம், தீண்டாமை போன்ற தீய குணங்களைக் களைந்து, அன்பு, இரக்கம், மன்னிப்பு, சமாதானம், தாராள குணம். சமத்துவம் போன்ற நற்பண்புகளை வளர்த்துக் குழந்தை உள்ளம் படைத்தவர்களாக மாறும்போது கிறிஸ்து எம்அகங்களிலே மகிழ்ச்சியுடன் வந்துறைவார்.



எனவே நாம் சிந்தித்துத் தெளிவு பெறுவோம்....
நல்வழியில் நடப்போம்.
மற்றவர்களையும் நடத்திச் செல்வோம்....

மலரப்போகும் புத்தாண்டில், மகிழ்ச்சி நிறைந்த புதுயுகம் படைப்போம்....


செல்வி. லூசியா சூசைப்பிள்ளை-
யாழ்ப்பாணம்.

★ அன்பு ★ மன்னிப்பு ★ ஒற்றுமை
★ சகோதரத்துவம்

என்ற

கிறிஸ்து ஒளியை


ஏற்றுவோம்



★ சுயநலம், பகைமை, பிரிவினை,
ஏற்றத்தாழ்வுகள் என்ற இருளை அகற்றுவோம்

★ எம் சமுதாயம் ஒளி பெறுவதாக !

'பாதுகாவலன்' வாசக அன்பர்களுக்கு
எமது நத்தார் — புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம் ஆ—ர்.



# கிறிஸ்துவின் வருகை

ஆதியிலே வார்த்தையாக இருந்த யேசு கன்னிமரியாளின் வயிற்றிலே கடவுளின் ஆவியால் ஏவப்பட்டு கருவானூர். பின் ஏரோதன் இதுமேயா நாட்டை ஆண்ட காலப்பகுதியிலே கிறிஸ்து பிறந்தார். இவருடைய வருகைக்காக கிறிஸ்துவின் முன்னோடியாகிய ஸ்நாபக அருளப்பர் மக்களை ஆயத்தப்படுத்தினர் எவ்வாறென்றால் பாவப்பரிகாரமாக மனந்திரும்புதலின் ஒரு அருள் சாதனமாக நீரினல் ஞானஸ்நானம் கொடுத்தார். இவ்வாறுகக் கொடுத்து வருகின்ற வேளையிலே ஸ்நாபக அருளப்பரையே வாக்களிக்கப்பட்ட மெசியா என்று மக்கள் எண்ணினர். அதை நிவர்த்தி செய்யப் பல சான்றுகளை அருளப்பர் மக்களுக்கு எடுத்துக் கூறுகின்றூர். ஆதியிலிருந்தே அவர் உள்ளார் அவரே உண்மையான மெசியா. அவரே ஒளி. அந்த ஒளியைக் குறித்துச் சாட்சியம் கூறவே வந்தேன் அவர் என்னிலும் முன்னிடம் பெற்றவர் நான் உங்களுக்கு நீரினல் ஞானஸ்நானம் தருகிறேன் அவரோ உங்களுக்கு ஆவியாலும் நெருப்பினலும் ஞானஸ்நானம் தருவார். நானோ குனிந்து அவருடைய மிதியடி வாரை அவிழ்க்க நான் தகுதியற்றவன் என்று கூறி கரடு முரடான வற்றைச் செம்மைப்படுத்தி உண்மையான மெசியாவின் வருகைக்குத் தக்க முறையிலே ஆயத்தம் செய்தார். பின யேசு இவ்வுலகிற்கு வந்த பின் அவரே மெசியாவென்று சுட்டிக் காட்டினூர். யேசு இவ்வுலகிற்கு வந்து தந்தையினுடைய சித்தத்தை செய்து முடித்து மீட்பின் பாதையிலே மக்களை இட்டுச் செல்வதற்கு வருகின்றூர் பாவிகளைத் தேடி வருகின்றூர். அதே நினைவுநாளை வருடம் தோறும் நாம் இம் மாதத்திலே நினைவு கூருகின்றேம். தன்விலை மதிப்பில்லாத இரத்தத்தை சிந்த ஒவ்வொரு கிறிஸ்தவனையும் புதுப் பிறப்பாக மாற்ற உறுதி கொண்டு திடம் கொண்டுவரும் யேசுவை நாமும் மன உவப்போடு ஏற்க நம்மை ஆயத்தம் செய்வோம். நம்மை மட்டுமல்ல அந்த அருளப்பரைப்போல் மற்ற மக்களையும் அவ்வருகைக்கு ஆயத்தம் செய்வதற்கு தூண்டுகோலாக இருப்போம யேசுவுடன் இணைவோம் யேசுவின் திருமுழுக்கில் பங்கடைவோம். அதாவது கிறிஸ்துவுடைய மகிழ்ச்சியிலே பாடுகளிலே பங்கெடுப்போம மீட்பின் பாதையிலே செல்வோம்.

எஸ். உதயகுமார்
அருள் ஆச்சிரமம்

# ஒளியாக இயேசு பாலன்

அன்று இயேசு கொட்டும் மழையிலும் குளிரும் பனியிலும் மாடுகள் தங்கும் கொட்டிலில் மனிதனுக மரியாளின் வயிற்றிலிருந்து இவ்வுலகிற்கு வந்தார். அதையே நாம் நத்தார்ப் பெருவிழாவாக கொண்டாடுகின்றேம். என்பது அனைவரும் அறிந்த ஒன்றுகும்.

ஆனல் அன்று மக்களின் உள்ளங்களிலும் இல்லங்களிலும் எவ்வாறு பிறந்தார். இன்று எவ்வாறு பிறக்கின்றூர் என்பது சிந்தனைக்குரிய விடயமாகும். இன்று பல பாலகர்கள் அந்த இயேசு பாலன் பிறந்த அதே நிலைமை அதிலும் மோசமான நிலையில் வெயிலென்றும் பாராது மழையென்றும் பாராது வைத்திய உதவியின்றிப் பிறந்து கொண்டே இருக்கின்றூர்கள். அவர்கள் நாட்டை மீட்க உருவாகிய இன்றைய பாலகர்கள். இயேசுபாலன் பிறந்த நாள் தொடக்கம் இறக்கும் அந்த நிமிடம் வரை நன்மையும் மற்றவர்களுக்கு உதவி புரிவதையும் அன்றி வேறெதுவும் அறியார் அதே போல் இயேசுவின வழியைப்பின்பற்றி அவர் சிறுவயதில் பெற்றேருக்கு எவ்வளவு உதவியாக இருந்து அவர்களுக்கு மகிழ்வைக் கொடுத்தாரோ அதே போல இன்றைய பாலகர்களும் நாமும் இந்த இருள் சூழ்ந்த வேளையிலும் எமக்கு ஓர் ஒளிமயமான எதிர்காலத்தை இறைவன் எமக்குத் தந்தருள வேண்டுமென்று குழந்தை இயேசுவை மன்றுடுவோமாக.

நீற்ரா சிவந்தி கொலின்ஸ்
மேற்கு வீதி, ஊர்காவற்றுறை

## அறிந்துகொள்ளுங்கள்...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்பேழைக்குள் இறைவன் மக்களுக்குக் கொடுத்த சட்டம் (கற்பலகை) (யாத் 25/16) மன்னு (யாத் 16/33, எபி 9/4) ஆரோனின் மலர்ந்த கோல் (எபி 9/4) இரண்டாவது சட்டத் தொகுப்பு என்பன (உப 31/26) பாதுகாக்கப்பட்டன.

மக்கள் பாலையில் தாங்கள் செல்லுமிடமெல்லாம் பேழையை எடுத்துச் சென்றனர். இதன்மூலம் இறைவனின் பிரசன்னம் தங்களோடு எம்போதும் இருந்ததை உணர்ந்தனர். பேழையின் மேலுள்ள அரியணைமீதிருந்து இறைவன் பேசுவதாகக் கூறினர் (யாத் 25/21-22). இஸ்ராயேல் மக்களுக்கு துன்பம் ஏற்படும்வேளையிலும் ஒரு செயலைச் செய்யத் தொடங்கு முன்னரும் மக்கள் தலைவர்கள் (மோயீசன், ஆரோன், யோசுவா) பேழையின்முன் சென்று கடவுளோடு உரையாடி ஆலோசனை பெற்றனர் (யாத் 33 / 9-11, லேவி 1/1). கூடாரத்தில் பேழை வைக்கப்பட்டிருக்க அக்கூடாரத்தின்மேல் மேகத்தூண் நின்றுகொண்டிருந்தது. இது இறை பிரசன்னத்திற்கு வெளியடையாளம். மேகத்தூண் வழிகாட்ட லேவியர் பேழையை தூக்கி முன்செல்ல மக்கள் பின்தொடர்ந்தனர் (யோசு 3/3-4).

மக்கள் எதிரிகளுடன் போரிடுகையில் பேழையை முன்னல் தூக்கிச் செல்வர். சேனையின் தலைவனுக இறைவன் போரிட்டார் (யோசு 6 / 6-12). போரில் வெற்றிபெற்றனர் எதிரிகள் சிதறுண்டனர்.

மக்கள் பலிசெலுத்தும்போதும் கடவுளுடன் செய்து கொண்ட உடன்படிக்கையைப் புதுப்பிக்கும்போதும் பலியிடும் மிருக இரத்தத்தில் சிறிதளவு எடுத்து மக்கள்மீதும் பேழையின்மீதும் (பீடத்திலும்) தெளிப்பார்கள்.

பேழையின் முக்கிய செயல்களைப்பற்றி தொடரும் இதழில் பார்ப்போம்.

இ. ம. ஜெயசீலன்

## கிறிஸ்து பிறப்பு

அகில ஒளி ஐயாவே
அகிலமெல்லாம் உன்கரத்தில் உள்ளதுவே
உலகிடை மாமன்னராக உதித்தது என்ன பாக்கியமோ
மக்களின் மேலுள்ள சொல்லொணு அன்பினலே. எம்
தந்தை எமக்கீந்த அருள்மகன் நீரேஐயா

வானணிகள் உம்பிறப்பை அகிலமெல்லாம்
போற்றிடவே அனைத்துமக்கள் கூடிவந்து அண்ணல் உம்மை
அடிதொழவே எம்மிடையே வந்துதித்தீரே
அன்னையின் கரம்தணிலே தவழ்ந்திடும்
அருள் மகனே. உம்வருகை காத்திருந்தோம். காலமெல்லாம்
சென்றிடவே

கோடான கோடி மாந்தரிலே
மாமகனுய் வந்தவனே
கோடி உள்ளம் உன் புகழை
கொட்டுகிறது உன்பிறப்பை.

எம்மரசே எம்மன்னவா இம்மண்ணில்
வந்துதித்தீர் எம்மவர்க்கு மீட்பளிக்க.

— சுதா —
அருள் ஆச்சிரமம்

## வரலாற்றுப் புகழ்பெற்ற சைலென் நைற் கிறிஸ்மஸ் பாடல்



அவுஸ்திரியா தேசத்தில் 'ஒபன் டோவ்' என்ற இடத்தில் புனித நீக்கிலார் ஆலயம் அமைந்திருந்தது. 1818-ம் ஆண்டு, கிறிஸ்மஸ்தின விழாவுக்குச்சிறிது நாட்களுக்கு முன்னர், அக்கிராமம் பனியால் சூழப்பட்டது. அத்துடன் அத்தேவாலயத்தின் முக்கிய சங்கீதக் கருவி, பழுதடைந்து விட்டது. பனி சூழ்ந்ததினல் பழுது பார்க்க யாரும் வரவில்லை.

ஆனுலும் ஒரு விசேடபாடல் கிறிஸ்மஸ்தினசாமப்பூசைக்குத் தேவையாக இருந்தது. எனவே பிரான்ஸ் குருபர் என்பவர் தனது சிநேகிதனுன யோசேப் மோர் என்பவர் இந்த அழகான பாடலை இயற்றினர். அதன் தலையங்கம் அப்போது 'Stille Nacht' என்பதாகும். அதன் பொருள் சைலென் நைற் (Silent Night) ஆகும்.

பிரான்ஸ் குருபர் என்பவரே இந்த அருமையான பாடலுக்கு இசை அமைத்தவர். அது அந்த ஆண்டு சாமப்பூசையின் போது ஒரு 'கிற்றூர்' வாத்தியத்துடன் மட்டும் பாடப்பட்டுப் பாராட்டைப் பெற்றது

பின்னர் சில நாட்கள் சென்றதும், அப்பாடல் ஓர் அவுஸ்திரிய குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகளுக்குப் பழக்கப்பட்டது. அவர்கள் முதன் முதலாக, யேர்மனியில் உள்ள லெயிசிக் என்ற இடத்தில் உள்ள சந்தை ஒன்றில் பாடியதுடன் அரங்கேற்றப்பட்டது.

அதனுல், 'சைலென் நைற்' என்ற பாடல் வெளியிடப்படும் முன்னரேயே, அது யர்மனியில் பிரபல்யமாகியிருந்தது.

'SAM'

## அன்பு விடுதலை ஒன்றிப்பு மகிழ்ச்சி

"ஆண்டவர் ஆவி உங்கள் மேல்"

மக்களை ஒன்று படுத்துங்கள்
அவர்களை விடுதலை செய்யுங்கள்
அவர்களுக்கு வாழ்வு கொடுங்கள்
வேலையற்றேரோடு உள்ளதைப் பகிருங்கள்
பிறர் உழைப்பை உங்களுடையதாகக் கருதுங்கள்
துன்பங்களினூடே ஒளி பிறக்கட்டும்

# இந்த நாள் இன்பநாள்

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் பாவமென்னும் விஷத்தின் கொடுமையில் கறைபடிந்து, அழகிழந்து, ஒளியிழந்து இருள் சூழ்ந்துள்ள மானிட உலகின் விடுதலைக்காக இருள் அகலவேண்டும். ஒளி பிறவேண்டும், உலக மாயைகள் அகலவேண்டும், என்று கருணைகொண்டு உலகில் மாபரன் இயேசு உதித்தார்.

இந்த மகிழ்ச்சி பொங்கும் விமலனின் ஜனன நாளில் இன்றைய உலகில் மனிதர்களின் மகிழ்வான வாழ்விற்கு தடைகள் பல உருவாகிக்கொண்டே இருக்கின்றன. உலகம் முழுவதிலும் போரும்பூசலும் அமைதியின்மையும் ... செயல்கள் மனித உயிரை உறிஞ்சிக் குடிக்கின்றன. வன் ... மானிட சமுதாயம் அவசர உலகின் அந்தகாரத்தினுள் சிக்குண்டு போலிவாழ்க்கையை வாழ்கின்றது.

கலக்கம் நிறைந்த இவ்வுலக மானிட சமுதாயத்திடையே சமாதானம் நிறைந்த வாழ்வு சங்கமித்து விமலன் பிறந்த இந்த நன்நாளில் இருண்ட இம்மண்ணில் நம்பிக்கை ஊட்டும் ஒளிவிளக்காய் திகழ்ந்திட "இந்தநாள் இன்பநாளாகிட" யாம் அனைவரும் எம் உள்ளங்களில் ஒளியேற்றுவோம்.

செல்வன் மா. ஜெறி,
''சென் தோமஸ் வீதி''
மாதகல்.

## 2ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



திரு. எஸ். பி. பிரான்சிஸ்
தோற்றம்: 6-10-1937 மறைவு: 2-01-1987

இறைவன் சித்தமே உம்மை அழைத்தது. உள்ளம் நோகுதே உம்மைப் பிரிந்தமையால். நெஞ்சம் தேடுதே உந்தன் நிழலை. நித்தம் ஜெபித்திடுவோம் உந்தன் ஆன்ம சாந்திக்காக.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 2-01-1989 திங்கட்கிழமை காலை 6-15 மணிக்கு யாழ். ஆசனக்கோவிலில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

அனைவரும் மறவாது வேண்டிக்கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

துயருறும்: மனைவி, மக்கள், உறவினர்.

18/A கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

A/182.

## விண்ணக வாழ்வின் 25 ஆம் ஆண்டு நினைவஞ்சலி




ஆசீர்வாதம் மனுவல்
கனகசுந்தரி
ஆண்டவன் அடியில்
31-12-1963

இவரின் ஆன்ம சாந்திக்காக 31-12-1988 சனிக்கிழமை காலை 6 மணிக்கு யாழ் புனித அடைக்கல மாதா ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும் திருப்பலியில் பங்குபற்றுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்பு மனைவி மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
71, வேம்படிவீதி,
யாழ்ப்பாணம். A/176.

## 4 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



நி. ப. பேதுருப்பிள்ளை
(நவாலி பேதுரு பாவிலு கோவில் சங்கிருஸ்தாம்)

அன்னை மடியில்: 29-06-1909
ஆண்டவன் அடியில்: 11-12-1984

ஆண்டு நான்கு உருண்டாலும்
அன்பு நெஞ்சங்கள் எரியுதையா.
ஆண்டவன் ஒளியில் நீர் வாழ
அனுதினமும் நாம் வேண்டுகின்றோம்.
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## முதலாம் வருட நினைவஞ்சலி



சூசைப்பிள்ளை அருளானந்தம்
மலர்வு: 1949 உதிர்வு: 15-12-87

இரக்கத்தின் இறைவா, உமது அடியான் சூசைப்பிள்ளை அருளானந்தத்தின் ஆன்மாவைஏற்று இரட்சித்தருளும். நிறைவான உமது அன்பின் அரவணைப்பில் நித்தியபேரின்ப வாழ்வை அவருக்கு ஈந்தருளும்.

இவரின் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
தாயார், சகோதரர்கள்,
ஊரார், உறவினர்.

அன்னை வேளாங்கண்ணி
கோவிலடி,
நடுக்குடத்தனை. A/177.

## 25 ஆம் ஆண்டு நிறைவு



(K.K.S) V. முத்தையா
இறப்பு 7.12.1963

தந்தாய், உமது அன்புப் பராமரிப்பில் இவரை நித்தியத் திற்கும் காத்தருளும். ஆமென்
மகளும் குடும்பமும்,
உறவினரும்.
134, எலிஹவுஸ் வீதி
கொழும்பு -15, A/171

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி

கிறிஸ்டீன் பபி
சவுந்தரநாயகம் தோமஸ்
தோற்றம்: 16-06-1949 மறைவு: 27-11-1988

எம் குலம் விளங்க வந்த
நற்செல்வமே!
மரணம் வருவது
நிச்சயம், ஆனால்
அந்தப் பருவம் உனதல்ல;
கூடிக் களித்த எம் நெஞ்சு
கலங்குவதை, கதறுவதை,
நீ அறியாயோ;
நின் பிரிவினை நாம்
எவ்விதம் பொறுப்போம்;
உனது உடல்
பிரிந்தாலும் என்றும்
எம் மன விளக்கின்
ஒளியானாய்.

இவளின் ஆன்மசாந்திக்காக
வேண்டுமாறு இரந்து
பிரிவால் துயருறும்;
ஆருயிர் கணவன்,
அன்பு மகன், அருமை மகள்,
தாய், சகோதரர்கள், மாமி,
மச்சான்மார், மச்சாள்மார்,
பெறுமக்கள், மருமக்கள்.
வீலட் வீதி,
மன்னார். A/179

## 2ஆம் வருட நினைவஞ்சலி




தோற்றம்: 02-07-1895 மறைவு: 10-01-1987

B. J. மரியாம்பிள்ளை

அன்பின் இறைவா! நீர் உம்மிடம் அழைக்கத் திருவுளமான மரியாம்பிள்ளை என்னும் உமது அடியானைக் கிருபையுடன் நோக்கி, உமது சுதனும் எம் இரட்சகருமான இயேசுவின் திருப்பாடுகளையும், மரணத்தையும், உயிர்ப்பையும் பார்த்து அவரை நித்திய வீட்டின் பங்காளியாக்கியருள உம்மை மன்றாடுகிறோம்.

இவரின் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி
சுருவில் வீதி,
கரம்பொன்.
A/181

## 5ஆம் வருட ஞாபகம்



மொத்தம் போல்
தோற்றம்: 26-11-1924 மறைவு: 12 4 1982



அருளப்பிள்ளை போல்
தோற்றம்: 3-1-1934 மறைவு: 24-12-1983

அன்புடை உறவு எங்கள்
அளவிட முடியாச் செல்வம்
ஒன்றுடன் ஒன்று பிரியவே
இருவரும் சேர்ந்து ஒன்றாய்
மறைந்தனர் எண்ணிப் பார்த்தோம்

வருடங்கள் ஐந்து கண்டோம்
தாங்கிட முடியாத் துயரில்
தவித்திடும் உறவு நாங்கள்
ஆண்டவன் துணையை வேண்டி
அனுதினம் செபிப்போம் உமக்காய்

நறுவிலிக்குளம்,
வங்காலை.

பிரிவாற் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்.

தேனருவி: திருக்குடும்ப விழா 30–12–88

## மதிப்பு அளிக்க வாக்குறுதி

எனக்கு அறிமுகமான நண்பர் ஒருவர். அருமையான மனைவி நல்ல வருமானம், வசதியான இல்லம். நான்கு பிள்ளைகள் என்ற மகிழுவோடு வாழ்ந்தவர். எதிர்பாராமல் அவரது மனைவியைப் பீடித்த புற்றுநோய் அவாகள் குடும்பத்தின் தீராத துலபமாயிற்று ஆயினும் அத்தலைவன் குறையின்றி அவளைப்பராமரித்து, உயிருடன் அவள் இருந்தால் போதும், குலவிளக்கு அணைக்கப்படக் கூடாது என்று வேண்டினுர். ஆனுல் புற்றுநோய் ஆகிவிட்டதே. மனைவியைத் தற்போது இழந்து நிற்கும் அக்கணவனை வாட்டும் தனிமை உணர்வு ஒரு தீராத புற்றுநோய் போல வளர்ந்தது. பணம், வீடு, செல்வாக்கு அனைத்தும் அவருக்கு யானைப் பசிக்குச் சோளம் பொரி எனக் காட்சி கொடுத்தது. தன் அன்பு மனைவியின் இழப்பு ஈடு செய்ய முடியாத பேரிழப்பானது மனைவியின் அருமை அவருக்குத தான் தெரியும்.

இப்படிச் சிலர் தம் துணைவரை மரணம் பிரித்துவிட்டது என்று ஓலமிடுகின்றனர் இன்னும் சிலர் திருமணவாழ்வு கிடைக்கவில்லையே என ஏங்கித் தவிக்கின்னர். ஆனுல் பலதப் திகள் தம் கணவன் மனைவி உயிருடன் இருந்தும் தனிமையை விரும்பித் தேடுகின்றனர். இந்நிலை ஏனோ?

குடும்ப வாழ்வு எப்படி அமைய வேண்டும் என்பதற்கு இறைவன் புராணத்தையும், புனர்கதைகளையும், துறவு முறையையும் எமக்குத் தரவில்லை. மாருக, நாசரேத்தூரில் வாழ்ந்த சூசை, மரியாள், இயேசு உருவாக்கிய குடும்பத்தை உதாரணமாக்கினுர்.

திருக்குடும்ப விழாத் திருப்பலியல் அருள்வாக்கில் அரும்பும் அறிவுரைகள் கணவன் மனைவி, பெற்ரேர் பிள்ளைகள் உறவின் வளர்ச்சிக்கு உரமாகின்றன.

இறைவாக்கும், திருக்குடும்ப வாழ்வும், கற்றுத் தரும் பாடங்களில் என்னைத் தொட்ட உண்மைப் பண்பு அடுத்தவர் அருமையை உணர்ந்து மதிப்பு அளிப்பதேயாகும். "அன்பு செய்யவும், மதிப்பளிக்கவும் வாக்களிப்பது'' திருமண அருட்சாதனத்தில் வழங்கும் வாக்குறுதியாகும். இன்று குடும்பங்களில் மனிதர்களிலும் பார்க்க காசுக்கும், நிலத்திற்கும், அந்தஸ்திற்கும் கொடுக்கும் மதிப்பு அதிகமாகிறது. குடும்ப உறவில் ஒருவரை ஒருவர் மதித்து வாழ்தலின் வடிவங்கள் பல விதம் ........

ஒருவர் ஒருவருடைய தனித்தன்மையையும், வித்தியாசங்களையும் அறிந்து புரிந்து கொள்ளுதல் (விட்டுக் கொடுத்தல்)

இவைபோன்றசிறிய ஆனுல் உயர்ந்த பண்புகள் மதிப்பளித்தல்' என்ற அணிகலனில் பொறிக்கப்பட்ட விலையுயர்ந்த மாணிக்கக்கற்களாகும். இவை குடும்பங்களை திருக்குடும்பங்களாக்கி இறை பிரசன்னத்தின் சுடர் பரப்பும் ஒளிக்கதிர்களாகும்.

சுவாமி ஜீவாபோல் அ.ம.தி.

## வாழ்த்தவா? எங்ஙனம்....

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேவையற்றவைதான். ஆனுல், குடும்பம் மூன்று சேர, ஒன்ருக உணவருந்தல், ஒருவர் ஒருவருடன் பகிர்தல் மிகவும் வேண்டியவை இந்த நத்தார் விழாக் காலத்தில் ஒருவரும் தனிமையில வாழக்கூடாது; வாழ நாம் விடவும் கூடாது. அப்படியாராவது தனிமையில் இருப்பின், ஒன்றில் அவரையோ அன்றேல் அவளையோ அழைத்து அவர்களை உங்கள் குடும்ப உணவுப் பகிர்தலிலும், உணர்வுப் பகிர்தலிலும், இணைத்துக் கொள்ளுங்கள். அன்றேல், அவரிடம் சென்று அவருக்குத் துணையாக அவருடன் டகிருங்கள். இப்படிப்படட பகிர்தலில், ஆதரவில் அன்பு மலர்கின்றது. வார்த்தை மனுவுருவாகின்றது. கிறிஸ்து பிறக்கின்ருர்.

எமது வாழ்வின் உண்மைகளில் நாம் வாழும் பொழுது இறைவன் பிறக்கின்ருர், எமது உண்மைத் தேவைகளில் கிறிஸ்து பிறக்கின்ருர். மீட்கப்பட்ட வேண்டியவற்றில் பிறக்கிருர், இறைவன் இறைபிறப்பிற்கும் மனித மீட்புக்கும் நெருங்கிய தொடர்புண்டு. மீட்புணர்வில் பிறப்பது தெய்வ உணர்வு. உள்ளத்தின் ஆழத்தில் அனுபவிக்கும் விடுதலை உணர்வில் பிறப்பதுதான், ஆன்மீகம் — இறையுணர்வு எமது பலத்தையும் பலவீனத்தையும் ஏற்றுக் கொள்ளும் பொழுது. சாக்குப் போக்கின்றி—அறிவியல் விளக்கங்கள் கொடுத்து எமது நிலைகளை நியாயப்படுத்தாது உண்மைகளை ஏற்றுக் கொள்ளும் பொழுது கிறிஸ்து பிறக்கின்கின்ருர். எமது உடைந்த நிலையை, எமது நொந்து நொறுங்கிய வாழ்வை, எமது இயலாமையை நாம் ஏற்றுக்கொள்ளும் பொழுது கிறிஸ்து பிறக்கின்ருர்.

உண்மை நிலைப்பாடுகளை ஏற்றுக்கொள்வது கடினம். சிலவேளைகளில் எமது உணர்வுகள் எமக்கே தெரிவதில்லை. கற்றுக்கொண்ட சில பழக்க வழக்கங்களாலும், அடக்கப்பட்ட உணர்வுகளாலும், அறிவியல் கொண்டு சில அநீதிகளை நியாயப்படுத்தியமையாலும், கொடுமையான அமைப்புகளையும் நிறுவனங்களையும், பக்திப்படுத்தியதாலும், (spiritualize) சில உண்மை நிலைப்பாடுகள் புரியாமல் போய் விடுகின்றன.

இந்நிலை மாறவேண்டும். எமது சிந்தனைகள் விரிவடையவேண்டும். எமது சில வாழ்க்கை அமைப்புகள், நிறுவனங்களாக்கப்பட்ட பாவங்கள் (structural sins) மாற்றப்படத்தான் வேண்டும். வன்மை வழி நின்று மாற்றுமல் தன்மை வழி நின்று சிந்தனை அடிப்படையில் மனிதாபிமான முறையில் மாற்றுவது ஆரோக்கியமானதும், நீடித்து நிலைப்பதும் ஆகும். இப்படிப்பட்ட மாற்றங்கள் ஏற்படும் பொழுது மனித மீட்புணர்வு, மனித விடுதலை உணர்வு ஏற்படுகின்றது. அங்குதான் அன்பு மலரும். வார்த்தை மனுவுருவாகும். இறைவன் மனிதனுவார். மனிதர் இறைமை நோக்கி வளர்வர். வாருங்கள் வளர்வோம். மலரும் ஆண்டில் மீட்புணர்வு பெற்று வளர்வோம். இப்படி வாழ்த்தவா?

### 31 ஆம் நாள் நினைவாஞ்சலி



ம. யூட் சக்காறி சந்திரக்குமார்

| அன்னை மடியில்: | ஆண்டவன் அடியில்: |
|---|---|
| 28-12-1970 | 26-11-1988 |

அன்னரின் ஆத்ம சாந்திக்காக யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் 28-12-1988 புதன்கிழமை காலை 7-30 மணிக்கு இரங்கற்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

"அன்பு மகனே! எம் செல்வமே!!
அன்னையின் ஆலயத்தில்
அழியா இசைதந்து,
சிலுவைப் பாடம் கற்று-நீ
நித்திய வாழ்வு பெற்றுயே.''

பிரிவால் துயருறும்
பெற்ருேர், சகோதரர், உற்ருர், உறவினர்.

19/3 பீச் லேன்,
ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம். A/184



கிறிஸ்மஸ் சிறப்பிதழுக்காக திருச்சபைச் சட்டத் தொகுப்பில் திருமணம் என்ற குடும்பம் ஒரு கதம்பத்தின் தொடர் கட்டுரையை இடை நிறுத்துகிருேம்.

எமது பகுதி வாசகர்கள் எழுத்தாளர்கள் அபிமானிகள் கருத்துத் தெரிவிப்பவர்கள் ஒட்டு மொத்தமாக எல்லார்க்கும் எமது கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள்.

எத்தனை விதமான துன்பங்களை கடந்த சில ஆண்டுகளாக நாம் அனுபவித்துக் கடந்துவிட்டோம். அத்தனை துன்பங்கள் மத்தியிலும் கிறிஸ்து பிறப்பு விழாக்கள் வந்து போகத்தான் செய்தன. 'அப்படி ஒரு கிறிஸ்மஸ் இந்தமுறை' என்ற களைத்துப்போன நினைப்பு நம்மில் பலருக்குண்டு. குறை கூற முடியுமா? பதில் சொல்லுவதே கஷ்டம். பல எதிர்பார்ப்புக்களில் ஏமாந்த போதும் பல நம்பிக்கைகளை இழந்த போதும் இறை நம்பிக்கைகளை ஆழமாக்குவோம். எமக்கு கிறிஸ்து எப்போதும் விடிவின் ஒளி வெள்ளிதான்.

அடுத்து மார்கழி 30 ஆம் திகதி திருக்குடும்ப விழா என்பதனுல் திருக்குடும்பம் பற்றிய ஒரு சிறப்புக் கட்டுரை ஆய்வைத் தருகிருேம். இதுதான் ஒவ்வொரு குடும்பத்தின் விழாவும் என்பது எம்மை அக்குடும்ப வழியில் வாழ ஒற்றுமைப்பட, உறுதிப்பட, நல்வாழ்வு வாழ வழி வகுக்கட்டும்.

(1) தன் வேலையில் கவனமாயிருந்தாள்

"உமது வார்த்தையின்படியே எனக்காகட்டும்" — என்ற அவளது அர்ப்பண வாழ்க்கையின் அடிவசனங்கள் அவளது வாழ்வு முழுவதும், எல்லா வேளைகளிலும் அர்த்தம் கொடுக்கும் வார்த்தைகளாகவும் உயிர் கொடுக்கும் வார்த்தைகளாகவும் இருந்தன. சுருக்கிச் சொல்வதானுல் தன்வேலையில் கவனமாயிருப்பதற்கு இந்த வார்த்தைகளை மௌனமாக அசை போட்டுக் கொண்டாள்.

(2) தன் பிள்ளையின் மனநிலைகளைச் சரிவரப் புரிந்து கொண்டாள்.

மரியாள் இறைத்தாயாகி வாழும் காலத்தில் இறை மகனை தொடக்கம் முதல் இறுதி வரை நன்கு புரிந்து கொண்டாள். பாஸ்கா விழாவில் காணுமற் போனது முதல், கானுவூர்த் திருமண விழாச் சம்பவம் ஊடாக, சிலுவையில் "அம்மா இதோ உன் மகன் என்று அருளப்பரைக் கொடுத்த போது ஏற்பட்ட அனுபவம் வரை தன் பிள்ளையை நன்கு புரிந்தாள்.

(3) மரியாள் தனது கணவனை எப்போதும் சார்ந்து வாழ்ந்தாள்.

மரியாள் எப்போதும் கணவன் சூசை எதை விரும்பினுரோ அதை விரும்பியும் செய்தும் வாழ்ந்தாள். முதலில் பெயரைப்பதிவு செய்யச் சென்றது, அடுத்து ஏரோதுவிடமிருந்து யேசுவைக் காப்பாற்ற எகிப்திற்கு ஓடியது, யேசுவிற்கு 12 வயது நடக்கும் போது சேர்ந்து தேடியது எல்லாவற்றிலும் தன் கணவன் சூசையோடு சேர்ந்தே இருந்தாள்.

(4) தந்தையான சூசையப்பர் நீதிமானுக இருந்தார்.

தாம் கூடி வாழுமுன் மரியாள் கருவுற்றிருப்பதைக் கண்டும் நீதிமானுனபடியால் மறைவாக விலக்கிவிடத் தேடினுர்.

அவரது நீதித் தன்மை தெய்வபயமாக மாறிக் காட்சி தருகிறது. எப்படி என்ருல் தெய்வ சட்டங்களுக்கு உடன் பணிகிருர். மரியாளை ஏற்க அஞ்ச வேண்டாம், குழந்தையை தூக்கிக் கொண்டு ஜெருசலேம் செல்— என்ற எல்லாக்கட்டளைகளையும் உடன் நிறைவேற்றுகிருர்.

மேற்கூறப்பட்ட நான்கு நிலைகளிலும் திருக்குடும்பத்தின் அங்கத்தவர்கள் எல்லோரும் நல்ல குடும்பத்திற்கு மேல் வரிச்சட்டமாகிருர்கள். இவை எல்லாவற்றையும் எங்கள் குடும்பங்களுக்கும் எடுத்துச் செல்வோம்.

அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை

பாதுகாவலன்
PATHUKAVALAN

செய்திப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.



# கிறிஸ்து பிறப்பு நிகழ்ச்சிகள் நமக்குத் தரும் செய்திகள் எவை?

கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாடும் நாம், அந்த விழா நிகழ்வுகள் — அந்தவரலாற்று நிகழ்ச்சிகளின் ஊடாக நமக்குத்தரும் செய்திகள் என்ன? நமது தெய்வீக வாழ்வுக்கு அவை கூறும் சிந்தனைகள் என்ன? என்று ஆழமாக நோக்குவது எம் வாழ்வில் அவற்றை எண்ணிப் பார்த்து இவ்விழாவை அர்த்தமுடையதாக்குவதற்கு உதவும். ''இறைவன் இந்த உலகை எவ்வளவு நேசித்தார் எனில் தனது ஒரே மகனை எமக்குத் தந்து அவரை விசுவசிப்போர் அனைவரும் அழிந்து விடாது நித்திய வாழ்வைப் பெற்றுக் கொள்ளும்படியாகவும் செய்தார்'' என்று புனித அருளப்பரின் நற்செய்தி வழியாக அறிகிறோம். இறைமகன் இயேசு உலகை எவ்வளவாக நேசித்து அதில் கரிசனை காட்டினார் என்பது அருளப்பர் வழியாக எமக்குப் புலனாகிறது. அவர் உலகை நேசித்தது போல உலக மாந்தரை அன்பு செய்தது போல நாமும் ஒருவரை ஒருவர் அன்பு செய்து எம்மிடமுள்ளதைப் பகிர்ந்து எமது உலக செல்வங்களைப் பகிர்ந்து வாழ அழைக்கப்பட்டுள்ளோம் என்பதை உணர்ந்து கொள்வோம்.

அடுத்த நிகழ்வு மரியன்னையின் மங்கள வார்த்தை. கபிரியேல் தேவதூதன் இயேசுவின் மனித அவதாரச் செய்தியை மரியாளுக்கு உரைத்த போது மரியாள், ''இது எப்படி ஆகும்; நான் கணவனை அறியேனே'' என்று உரைக்கின்றாள்; வானதூதன் ''பரிசுத்த ஆவி உம்மீது நிழலிடும், கடவுளின் வல்லமை உம்மீது தங்கும்,'' என்றவுடன் மரியாள் ''இதோ ஆண்டவருடைய அடிமை உமது வார்த்தையின்படியே எனக்கு ஆகக்கடவது'' என்றாள். எவ்வளவு அதிசயமான பணிவு. உன்னதமான தாழ்ச்சி, தெய்வத் திருமகனின் தாயாகத் தன்னை அர்ப்பணித்தாள் மரியாள். ஆச்சரியமான அபார நம்பிக்கை—மரியாளிடமிருந்து வெளிப்பட்டது. நாம் வாழ்க்கையில் எதிர்ப்படும் சவால்களுக்குத் துணிவோடு முகங்கொடுக்கின்றோமா? மரியாளைப்போல முற்று முழுதாக இறைவனுக்கு எம்மைக் கையளித்து உமது அடிமை உமது சித்தத்தின்படி ஆகட்டும்என்று நாம் சொல்லத் துணிகிறோமா? அல்லது உலக விமர்சனங்களுக்குப் பயந்து சவால்களை எதிர்நோக்கத் தயங்குகிறோமா? பரித்தியாகங்களுக்கும் பாடுகளுக்கும் பயந்து, பொறுப்புக்களையும், கடமைகளையும் ஏற்கப் பின்நிற்கிறோமா? மரியாள் எல்லாவற்றையும் அமைதி என்ற போர்வையில் புதைத்து இறை வார்த்தை தன்னில் ஊடுருவிப் பாய்ந்து பிரதிபலிக்க மௌனமாக இருந்ததுபோல் நாமும் இருக்க முயலுகின்றோமா?

நத்தார் இரவிலே மாட்டுத் தொழுவத்திலே அன்னை மரியாளும் புனித சூசையப்பரும் குழந்தை இயேசுவை துணிகளாற் சுற்றி முன்னிட்டியில் கிடத்திவிட்டு விழிப்பாய் இருந்தனரல்லவா? இது அவர்களுடைய மாபெரும் பொறுப்புணர்வை எமக்கு எடுத்துக் காட்டுகின்றது. இப்பொறுப்புணர்வு கிறிஸ்தவ பெற்றோரிடமும் தம்பிள்ளைகள் மட்டில் ஏற்பட வேண்டும். பெற்றோர் தம்பிள்ளைகளை விழிப்புடன் கண்ணுங் கருத்துமாய் வளர்க்கக் கடமைப்பட்டுள்ளனர். குடும்பத்தில் அமைதி, சமாதானம், ஒற்றுமை நிலவ வேண்டும். இது மிகவும் சிரமமான, கஷ்டமான சிக்கலான விடயமாகும். தாயும் தந்தையும் ஒருவரில் ஒருவர் பொறுப்புக்களைச் சுமத்தாது இருவருமே பொறுப்புக்களைப் பகிர்ந்து கொள்வதன் மூலமே அக்குடும்பத்தில் நிறைவான அமைதி நிலவ முடியும். கடவுளை முதலிடத்தில் வைத்து வாழ்க்கை நடத்தினால் அது அர்த்தமுடையதாகும். எமது சுமைகளும் இலகுவானதாகத் தென்படும்.

எஸ் எம். ஜே.




# வாழ்த்து - வணக்கம்

- அண்மைக்கால அசம்பாவிதங்களினால் அநியாயமாகக் கொல்லப்பட்டவர்களுக்கு எமது அஞ்சலிகள்!
- அன்புக்குரியவர்களைப் பறிகொடுத்துவிட்டு, உதவுவார் இன்றி அந்தரிப்பவர்களுக்கு எம் ஆழ்ந்த அனுதாபங்கள்!
- பாதுகாவலனுக்கு ஆக்கங்களை அனுப்பி ஆதரவு அளித்து வரும் அருட்தந்தையர்கள், மறை ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், வாசகர்கள், அபிமானிகளுக்கு எமது நன்றிகள்.
- வாரந்தோறும் "தேனருவி" மூலம் ஞானக்கருவூலங்களை வாரி வழங்கிவரும் சுவாமி ஜீவாபோல் அவர்கட்கு எம் வாழ்த்துக்கள்.
- "குடும்பம் ஒரு கதம்பம்'' ஆசிரியர் அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை அவர்கட்கும் எம் பாராட்டுக்கள்.
- வாரந்தோறும் இளைஞர் உலகத்தை இயக்கிவரும் அன்பு நெஞ்சன் வி. பி. அருள்திரு வின்சன்ற் பற்றிக் அடிகளுக்கு எமது நன்றிகள்.
- வாரந்தோறும் ''அருள்வாக்கு அறிவோம்'' பகுதியை அமைத்துவரும் மறை ஆசிரியர்கள் எஸ். ஏ. நாதர், இ. ம. ஜெயசீலன், கி. சா. பங்கிராஸ் அவர்களுக்கும் எமது நன்றிகள்.
- காவலன் கண்மணிகளைக் காத்து நடத்திவரும் ''அன்பு விழி'' ஆசிரியர் பிலிப்நேரி அவர்களுக்கும் எம் அன்பார்ந்த வாழ்த்துக்கள்.
- எமக்கு ஆலோசனைகள் வழங்கி, ஊக்கமளித்து, ஆதரவு அளித்து வரும் ஆயர் – குருக்கள் முதலானோர்க்கு அன்பார்ந்த வணக்கங்கள்.
- பாதுகாவலனின் வளர்ச்சிக்குப் பல வழிகளிலும் பணியாற்றி வரும் தொழிலாளத் தோழர்கள், நிருபர்கள் முதலானோர்க்கு மனமார்ந்த வாழ்த்துக்களும் நன்றிகளும்.
- துன்பமேகங்கள் சூழ்ந்துள்ள காலமாயினும், மாபெரும் துன்பங்களினூடாக மனுக்குலத்துக்கு மீட்பளிக்க வந்த வள்ளல் இயேசுவின் நாமத்தினால் அனைவர்க்கும் குறிப்பாக இழப்புகளுக்குள்ளாகி இன்னலுறும் எம் சகோதரர்க்கும்–நம்பிக்கையளிக்கும் நத்தார்–புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.



— இ. யே. அருமைநாயகம், ஆசிரியர்

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1988-ம் ஆண்டுடிசம்பர் மாதம் 25ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்